பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 23 வியாழக்கிழமை (08.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 12

## மாணவர்களின் போராட்டத்தால் யாழ். பாடசாலைகள் முடங்கின!

### வீதிகளில் ரயர்கள் எரிப்பு; படையினர் துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம், டிசெ. 8

வடமராட்சியில் இராணுவத்தினருக்கு எதிராக மாணவர்கள் ஆரம்பித்த பாடசாலைப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று யாழ். குடாநாடு முழுவதும் பரவியது. இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் செயலிழந்தன. மாணவர்கள் வீதிகளுக்கு இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அவர்களைக் கலைப்பதற்குப் படையினர் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்பவற்றின் அருகே மண்அணைகள் புதுப்பிக்கப்படுவதை எதிர்த்து அப் பாடசாலைகளின் மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் வகுப்புக்களைப் புறக்கணித்துப் போராட்டத்தில் குதித்தனர். வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களில் ஈடுபட்டனர். நேற்று மூன்றாவது நாளாகவும் அவர்கள் போராட்டத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைகளைத் தவிர்க்க ஐ.நா. செயலர் வற்புறுத்து

போர் நிறுத்தப் புரிந்துணர்வு [illegible]ந்தத்தைக் கிரமமாகக் கடைப்பிடித்து வன்[illegible]கள் தலைதூக்குவதை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கொபி அனான் இலங்கை அரசையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் வலியுறுத்தியிருக்கிறார். இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான நிலை குறித்து ஐ.நா. செயலர் கவலை கொண்டிருக்கிறார் என அவரின் அலுவலகம் விடுத் திருக்கும் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அமைதி முயற்சிகள் குறித்து கூடுதலான அக்கறையும் ஆர்வமும் கொண்டிருப்பதாக அதன் பேச்சாளரொருவர் தெரிவித்திருக்கிறார். (எ-க)

# யுத்தநிறுத்த கண்காணிப்புப் பொறுப்பை நோர்வேயிடமிருந்து பிடுங்க அரசு முடிவு!

## கோடி காட்டுகின்றார் ஜனாதிபதி ஜே.வி.பியும் உறுதிப்படுத்துகிறது

கொழும்பு, டிசெம்பர் 8

**இலங்கை சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணி மற்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்கான பொறுப்பு ஆகியவற்றை வகித்துவரும் நோர்வேயிடமிருந்து அவற்றில் ஒன்றை - யுத்தநிறுத்த கண்காணிப்புப் பொறுப்பை - பிடுங்குவதற்கு இலங்கை அரசுத்தலைமை தீர்மானித்திருக்கின்றது.**

**இந்த முடிவு குறித்து முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடனான சந்திப்பில் கோடி காட்டியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

**அதேவேளை, ஜனாதிபதி இத்தகைய முடிவை எடுத்திருப்பதை அவரது நெருங்கிய - கூட்டமைப்புக் கட்சியான - ஜே.வி.பியும் நேற்று உறுதி செய்தது.**

அனுசரணையாளர்களாகச் செயற்படும் நோர்வே தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

அனுசரணைப் பணிகளை நோர்வே முறையாகச் செய்யாத நிலையில் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பணியில் வேறொரு நாடொன்றையும் ஈடுபடுத்த வேண்டிய நிலை உருவாகிவரு[illegible]து என ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புங்குருதீவில் சுற்றிவளைப்பு

புங்குடுதீவு, டிசெ.8

புங்குடுதீவு பகுதி நேற்று முழுநாளும் படையினரால் சுற்றிவளைத்துத் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

நேற்றுக்காலை அங்கு வந்த கடற்படையினரும், பொலீஸாரும், வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தினர். இந்தத் தேடுதல் நேற்று மாலை 6 மணிவரை இடம்பெற்றது.

எனினும், தேடுதலின்போது எவரும் கைது செய்யப்படவில்லை. (எ-ரி-14)

## திருமலையில் நாளை பூரண கதவடைப்பு

அரச படைகளின் செயற்பாட்டைக் கண்டிப்பது உட்பட நான்கு விடயங்களை முன்வைத்து நாளை வெள்ளிக்கிழமை திருகோணமலையில் பூரண கதவடைப்பு நடத்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ்ச் சமூகத்தின், பெயரால் இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அழைப்பில் தெரிவிக்கப்பட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அனுசரணைப் பணிக்கு நோர்வேக்கு ஜனாதிபதி மஹிந்தவிடமிருந்து அழைப்பு

சமாதான நடவடிக்கையில் அனுசரணைப் பணியைத் தொடருமாறு நோர்வே அரசை உத்தியோகபூர்வமாகக் கோரியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நீண்டகால இழுபறிக்குப் பின்னர் ஒருவாறு இலங்கை ஜனாதிபதியிடமிருந்து நோர்வேக்கு அழைப்புக் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சந்தித்தார். அப்போதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய கூட்டமைப்பு சகாக்களான ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்றவை நோர்வேயின் அனுசரணைப் பணியை ஆட்சேபித்து வரும் நிலையில், தமது பதவியை ஏற்று 15

(16ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு பொறுப்பை மாற்றுவதாயின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றவேண்டும்

கொழும்பு, டிசெ.8

யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பொறுப்பிலிருந்து நோர்வேயை விடுவித்து, அந்தப் பொறுப்பை வேறு ஒரு நாட்டிடம் ஒப்படைக்கும் இலங்கை அரசின் உத்தேசத் திட்டத்தை செயற்படுத்துவதாயின் அதற்கு, யுத்தநிறுத்தத்துக்கு வழி செய்துள்ள அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாற்றம் செய்ய வேண்டும்.

ஒப்பந்த விதிகளை மாற்றாமல் பொறுப்பை மாற்ற முடியாது; அதற்கு இடமில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் கீழேயே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்கான தலைமைப் பொறுப்பு நோர்வேக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

எனவே, அதனை மாற்றாமல் பொறுப்பை

(16ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி வழியாக நோர்வேத் தூதர் இன்று வன்னிக்குப் புறப்படுகிறார்

### திரும்பி வரவாவது ஹெலி வசதி கிடைக்குமா என்பது தெரியாது

கொழும்பு, டிசெ.8

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வடக்கு - கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை குறித்து அவர் பலாலியில் பாதுகாப்புப் படைகளின் உயரதிகாரிகளுடன் முக்கிய கலந்துரையாடலொன்றையும் நடத்தவுள்ளார்.

இன்று பிற்பகலிலேயே பலாலியிலிருந்து தரைவழியாக வன்னிக்குச் செல்லும் நோர்வேத் தூதுவர் இன்று மாலையில் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்வார். அங்கு ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற பிரதேசங்களில் புனர் நிர்மாணப் பணிகளை அவர் பார்வையிடுவார்.

நாளை கிளிநொச்சிக்குச் செல்லவுள்ள நோர்வேத் தூதுவர் அங்கு விடுதலைப் புலி

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மீது கடும் அழுத்தத்தைப் பிரயோகிக்க இணைத்தலைமையைக் கோருகின்றார் மஹிந்த

### நேற்றுக்காலை நோர்வேத் தூதருடன் அவர் பேச்சு

கொழும்பு, டிசெ,8

வடக்கு-கிழக்கில் அடிக்கடி இடம்பெற்று வரும் மோதல்களை முடிவுக்கு கொண்டு வந்து அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காக இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தமொன்றை வழங்க வேண்டுமென அவசரவேண்டுகோளொன்றை விடுத்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இணைத்தலைமை நாடுகளின் கொழும்புத் தூதர்கள் நால்வரையும் ஜனாதிபதி மஹிந்த நேற்றுச் சந்தித்தார். கொழும்பிற்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை நேற்றுக் காலை சந்தித்த ஜனாதிபதி நேற்றுமாலை இதர மூன்று தூதுவர்களுடன் (அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஜரோப்பிய ஒன்றியத்தலைமை நாடான பிரிட்டன் ஆகியவற்றின் தூதுவர்க

(16ஆம் பக்கம் பார்க்க)

# எத்தகைய தடைகள் வந்தாலும் அமைதிப் போராட்டம் தொடரும்

## தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

எத்தகைய தடைகள் வரினும் - ஏற்படுத்தப்படினும் மாணவரின் அமைதிப் போராட்டம் தொடரும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்.

கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணித்த குடாநாட்டுப்பாடசாலை மாணவர்கள் நேற்றைய தினம் அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இந்தப் தாக்குதலைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே தமிழ் மாணவர் ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

பாடசாலையைச் சூழ அமைந்திருக்கும், அண்மித்திருக்கும் இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பவற்றை அகற்றுவதோடு அச்சுறுத்தல் எவையுமற்ற சுதந்திரமான கற்றலுக்கு இராணுவம் வழிவிடல் வேண்டும் - என்ற கோரிக்கையுடன் தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்ட மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று யாழ். குடாநாடு எங்கும் விஷ்தரிக்கப்பட்டது. இந்த நிலையில் தமது கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணித்து அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திவரும் மாணவர்கள் மீது இராணுவம் கண்மூடித்தனமாகத் தாக்குதலை மேற்கொண்டுவருகிறது. இந்தச் சம்பவங்களைத் தடுக்க எவரும் முன்வராத நிலையில் மாணவர்களாகிய நாங்கள் மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நேற்றைய தினம் அரசடி வீதி, பிறவுண் வீதிச் சந்திப்பகுதியிலும், கே.கே.எஸ்.வீதி - யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகிலும், ஹாட்லி கல்லூரிக்கு அருகிலும் அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக தடியடிப்பிரயோகத்தில் ஈடுபட்டனர். இதனால் மாணவர்கள் காயம் அடைந்ததுடன், வீதிவழியே வந்த பொதுமக்களும் நையப்புடைக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் இராணுவ ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து தங்களது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் பகிஷ்கரிப்பிலும், அமைதி ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுவருகின்ற இந்த வேளையில் இவ்வாறான அடக்குமுறைகளை மேற்கொண்டு மாணவர்களைச் சீண்டினால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேருமென எச்சரிக்கிறோம்.

மாணவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்ற வேளைகளிலும் பலமுறை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்த போதிலும் அவர்கள் தங்களுடைய பிரசன்னத்தைத் தவிர்த்துக்கொண்டனர்.

மாணவர்களுடைய கோரிக்கை நிறைவேறும் வரையும் மாணவர்களுடைய போராட்டம் தொடரவுள்ள நிலையிலும் அனைத்துக் கல்விச்சமூகத்தினதும் பூரண ஒத்துழைப்பையும் நாடிநிற்கிறோம்.

எத்தகைய தடைகள் வந்தாலும் எமது போராட்டத்திலோ, எமது கோசத்திலோ பின்வாங்காது போராடுவோமென ஒட்டு மொத்த தமிழ் மாணவர்கள் சார்பாகவும் வலியுறுத்திக் கூறுகிறோம் - என்றுள்ளது.

**பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

கடந்த பல வருடங்களாக இராணுவத்தின் அடாவடித்தனங்களைப் பொறுக்க முடியாத மாணவர் சமூகம், சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளைத் தொடர இராணுவத்தினர் வழிவகுக்க வேண்டும் என்றும் -

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகிய பகுதிகளில் புதிதாக காவலரண்கள் அமைக்கப்படுவதனை நிறுத்தவேண்டும் என்றும் - மாணவர்கள் தொடர்மறியல் போராட்டங்களை நடத்திவருகின்றனர். இந்த மாணவர்களின் போராட்டத்திற்கு மதிப்பழிக்காது மாணவர்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்துவது கண்டிக்கப்படவேண்டியது. இது மாணவர் சமூகத்தைச் சீண்டிப் பார்க்கும் செயலாக உள்ளது.

எனவே, இனிமேலும் மாணவர்களாகிய நாம் எம்மைச் சூழ்ந்துள்ள ஒடுக்கப்பட்ட புறச்சூழலில் இருந்து எமது கல்விச் செயற்பாடுகளைத் தொடரமுடியாது. எனவே, எமது நியாயமான இந்தக் கோரிக்கைகளை ஏற்றுப் புரட்சி கொண்டுள்ள மாணவர்களுக்கு அறவழித் தீர்வைக் கொடுக்க மறுத்து அடாவடித்தனம் அரங்கேற்றப்படின் அனைத்து உயர் கல்வி நிறுவனங்களும் இப்போராட்டத்தில் எதிர்வரும் நாள்களில் முழுமையாக இணைய வேண்டிய நிலை ஏற்படும்.

உடனடியாக இராணுவம் இப்பாடசாலைகளையும் இதன் சார் சுழலையும் விட்டு வெளியேற வேண்டும் என்றும் - சர்வதேசமும் இவ்வுண்மை நிலையான நிலைப்பாட்டை உணர வேண்டும் என்றும் - தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதோடு மாணவர்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் அடாத்துக்கள், அத்துமீறல்களுக்கு வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

**உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம்**

எமது மாணவர்கள் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் முட்கம்பி வேலிகளுக்குள் இருந்து தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்காத ஸ்ரீலங்கா இராணுவம் எமது மாணவர்களின் கல்விக் கூடங்களை இராணுவ முகாம்களாக்கியுள்ளது. இத்தகைய முட்கம்பி வேலிகளுக்குள் எமது மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வது என்பது பெருந்தடங்கலாக இருந்து வருகின்றது. அவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும் இருந்து வருகின்றன. இதனை நாம் பலமுறை சர்வதேசத்திற்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால், அவர்கள் வாய்மூடி மௌனிகளாகவே இருந்து வருகின்றனர்.

இதனால், எமது மாணவர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடக்குமுறைக்கு எதிராக அகிம்சை வழியில் போராட்டத்தை ஆரம்பித்தனர். மாணவர்களின் போராட்டத்தை அடக்கும் முகமாக மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும், தடியடிப் பிரயோகம் செய்தும் வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இத்தாக்குதல் முதல் தடவையுமல்ல.

05.12.2005 அன்று ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவர்கள் நடத்திய அகிம்சை ரீதியான போராட்டத்தில் 50 இற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியதுடன், 06.12.2005 அன்றும் தமது அகிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்மீது படையினர் தாக்குதல் நடத்தியும் - நேற்று 07.12.2005 அன்று யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக வைத்து எமது மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், அவர்களைக் கடுமையாகத் தாக்கியுமுள்ளனர். இது மாணவர்கள் மீது புரிந்துள்ள அடாவடித்தனத்தை தெளிவாகக் காட்டியுள்ளது. இவ்வாறு இராணுவத்தினர், எம் மாணவர்கள் மீது வன்முறைகளைப் பிரயோகித்து எம்மைத் சீண்டி வன்முறைக்கு இழுக்கின்றனர். அவர்கள் ஒன்றைத் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். மாணவர் சமூகம் மீது வன்முறையைப் பிரயோகிப்பது எதிர்வரும் நாள்களில் பாரிய பின்விளைவுகளை ஸ்ரீலங்கா இராணுவம் சந்திக்கவேண்டிவரும்.

மாணவர் மீதான ஸ்ரீலங்கா இராணுவத்தின் வன்முறை தொடருமாயின் எமது அகிம்சை வழிப் போராட்டத்தை நிறுத்தி ஆயுதவழிப் போராட்டத்திற்கு இட்டுச் சென்று எமது மாணவர்களாலேயே அவர்கள் துரத்தப்படுவார்கள் - என்று அதில் உள்ளது.

(எ)



குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த வவுனியா மாவட்ட நீதிவான் மா. இளஞ்செழியன் விசாரணை மேற்கொள்வதை முதலாவது படத்தில் காணலாம். அருகில் வவுனியா மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி காணப்படுகின்றார். அடுத்துள்ள படத்தில் சம்பவத்தில் உயிரிழந்தவரின் தாயார் கதறி அழுவதையும் காணலாம். (படங்கள்: வவுனியா செய்தியாளர்)

# வவுனியாவில் கிரனேட் வெடிப்பு ஒருவர் பலி: ஐந்து பேர் காயம்!

வவுனியா பஸ் நிலையத்திற்கு அருகில் நேற்றுபிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டுள்ளார். ஒரு சிப்பாய் உட்பட 5 பேர் காயடைந்துள்ளனர்.

வவுனியா பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கடைத் தெருப்பக்கமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலீஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் மாங்குளம் ஒலுமடுவைச் சேர்ந்த சுப்பிரமணியம் யோகபுத்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்தவர்களான பாஸ்கரன் கமலேஸ்வரி (வயது 36), மகேஸ்வரன் கமலரூபன் (வயது 21), தம்பிராஜா சந்திரபோஸ் (வயது 30), ஜெரால்ட் நீலமேகம் (வயது 25), இராணுவ சிப்பாயான பிரசன்னா ஜயதிலக்க (வயது 22) ஆகியோர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்ட பின்னர் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (எ-6-14-164)

# பாடசாலைகளில் தவணைப் பரீட்சை பகிஷ்கரிப்பினால் நேற்று குழம்பியது

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.மாவட்டம் முழுவதும் நேற்று பாடசாலை மாணவர்கள் நடத்திய பகிஷ்கரிப்புப் போராட்டத்தை அடுத்து பாடசாலைகளில் நடைபெற்றுவந்த மூன்றாம் தவணைப் பரீட்சைகள் தடைப்பட்டன.

வடமராட்சிப் பிரதேச மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக எதிர்வரும் 9ஆம் திகதிவரை மாணவர்களின் பகிஷ்கரிப்பு மாவட்டம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

யாழ்.நகரம் உட்பட எல்லா இடங்களிலும் நேற்றுப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பித்தன.

பாடசாலைகளுக்கு மிகக்குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே வருகை தந்திருந்தனர். அவர்களும் நேர காலத்துடன் வீடுகளுக்குத் திரும்பினர்.

எனினும், காலையில் சில பாடசாலைகளில் திட்டமிட்டபடி தவணைப் பரீட்சை ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. அதேவேளை, வேறு பல பாடசாலைகளில் மாணவர் வரவின்மையால் பரீட்சை நடத்தப்படவில்லை.

யாழ். கல்வி வலயத்தில் சில பாடசாலைகளில் தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் விநியோகிக்கப்பட்டிருக்கலாம் எனவும் அது தொடர்பாக அதிபர்கள் மூலம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

மூன்றாம் தவணைப்பரீட்சை வலய மட்டத்தில் அச்சிடப்பட்ட வினாத்தாள்களைக் கொண்டு நடத்தப்பட்டுவருகிறது. இதனால், பரீட்சையை ஒழுங்காக நடத்துவதில் குழப்பமானநிலை ஏற்பட்டிருக்கிறது.

நேற்று வினாத்தாள்கள் எங்காவது விநியோகிக்கப்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டால் அந்தப் பாடங்களுக்குப் புதிதாக வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு பரீட்சை நடத்தப்படும் என்று வலயக் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை- கோப்பாய் கல்விக் கோட்டத்தில் பகிஷ்கரிப்பின் மத்தியிலும் நேற்று ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சையும் மற்றும் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கு மாகாண மட்டத்தில் வெளிக்கள நிலையத்தால் நடத்தப்படும் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பரீட்சைகளும் வழமை போல நடத்தப்பட்டன என்று எமது செய்தியாளர் தெரிவித்தார்.

ஏனைய கல்வி வலயங்களிலும் பரீட்சைகள் தொடர்பான ஏற்பாடுகளில் நேற்று குழப்பகரமான நிலைமையே காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

பரீட்சையைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்பது தொடர்பாக கல்விப் பணிப்பாளர்கள் கூடி ஒருமித்து முடிவு எடுத்து குழப்ப நிலையைத் தவிர்க்கவேண்டும் என்று பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.

(ஐ-11)

## பரிசளிப்பு ஒத்திவைப்பு

பருத்தித்துறை 'போரூட்' அமைப்பின் கிளை நிறுவனமான ஒளி நிறுவனம் வடமராட்சிப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய சர்வதேச தினங்களுக்கான போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா தவிர்க்கமுடியாத காரணங்களால் இன்று நடைபெறமாட்டாது என்றும் -

மேற்படி பரிசளிப்பு நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கலை விழா

வலி.வடக்கு,டிசெ.8

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா, குடி தண்ணீர்த் தாங்கி திறப்பு விழா, கலை விழா ஆகியன இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அதிபர் பொ.கணேஸ்வரநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த விழாக்களில் முதன்மை விருந்தினராக உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் சிறப்பு விருந்தினராக சி.நடராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-86)

# மாணவர்களும் படையினரும் யாழ்.நகரில்...



படையினரோடு வாக்குவாதம்...

படங்கள்: பிரபா



மாணவரை மிரட்டும் 'பவள்'...



கல்வித் தடை நீங்கும்வரை இந்தத் தடை தொடரும்...




குவிக்கப்பட்ட படையினர்...

# ஹாட்லி மாணவர்களின் நேற்றைய போராட்டம்...



உரிமை கிடைக்கும்வரை ஓயோம்...




இரண்டாவது நாளாக சமரச முயற்சி...

படங்கள்: சுந்தரலிங்கம்



முட்கம்பி வரியலுக்குள் நின்றுகொண்டு...





பேச்சு முடிந்து திரும்புகையில்...

# கொழும்பில் ஒளிந்துள்ள புலிகளை தேடிப்பிடிப்பதற்கு உத்தரவிடுக!

## ஜனாதிபதியைக் கோருகிறது ஹெல உறுமய

கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தி அங்கு ஒளிந்திருக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களைப் பிடிப்பதற்கு முப்படைகளுக்கும் உத்தரவிடுமாறு ஜனாதிபதி மஹிந்தவிடம் ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு சாந்திநிகேதன் கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இக்கோரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் கருத்துத்தெரிவிக் கையில்:-

மஹிந்த சிந்தனையை முழுமையாகச் செயற்படுத்தும் வரையில் எமது ஆதரவு தொடரும். அவ்வாறு செயற்பாடுகள் நடை முறைப்படுத்தப்படாதுவிட்டால் ஆதரவு வாபஸ் பெறப்படும். வெளிநாட்டு, உள்நாட்டுப் பிரிவினைவாதச் சக்திகளின் அழுத்தங்கள் ஜனாதிபதிக்கு விடுக்கப்படலாம். இதற்கெல்லாம் அசைந்து கொடுக்காது சவால்களைச் சந்தித்து நாட்டையும் இனத்தையும் மதத்தையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஆதரவு வழங்குவோம்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தித் தோல்வியடைந்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரிவினைவாத சக்திகள் குழப்பங்களை ஏற்படுத்த முனையலாம். இதனைத் தடுத்துநிறுத்தி ஜனாதிபதி பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் - என்றார். (த-203)

## ஊடகவியலாளரை அச்சுறுத்தியதற்காக மன்னிப்புக் கோரினார் மேர்வின் சில்வா

இனிமேல் ஊடகவியலாளர்களை அச் சுறுத்தவோ துன்புறுத்தவோ மாட்டேன் என்று தொழில் விவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா நீதிமன்றத்தில் உறுதியளித்தார்.

ஊடகவியலாளர் ஜனித செனவிரத்ன விற்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாகப் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை கடந்த வியாழக்கிழமை கொழும்பு நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

இந்த விசாரணையின்போதே மேர்வின் சில்வா மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மேர்வின் சில்வா உட்படப் 10 பேரைக் கொண்ட குழுவினர் 'திவயின' பத்திரிகை அலுவலகத்திற்கு இரண்டு வாகனங்களில் சென்று ஊடகவியலாளர் ஜனித செனவிரத்னவை தகாத வார்த்தைகளால் ஏசியதுடன் கொலைசெய்வோம் என்றும் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர் என்று மேர்வின் சில்வாவிற்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக நீதிமன்றில் மன்னிப்புக் கோரினார் மேர்வின் சில்வா.

இனிமேல் பத்திரிகை அலுவலகங்களுக்குள் அத்துமீறி உட்பிரவேசிக்கவோ ஊடகவியலாளரை அச்சுறுத்தவோ மாட்டேன் என்றும் அவர் உறுதியளித்தமையையடுத்து இந்த வழக்கைச் சமரசமாகத் தீர்த்துவைத்தார் நீதிபதி. (த-203)

### அழைப்புக் கட்டளை

(இல.16 பிரிவு 55(1))

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட/நீதிமன்றத்தில்

ஈழவேந்தன் பெண் சுமதி,
'வேல் வாசம்'
கோண்டாவில் வீதி, இருபாலைச் சந்தி.

வழக்கு இல. மணநீக்கம் /621 எதிர் வழக்காளி

வைத்திலிங்கம் ஈழவேந்தன்,
'வேல் வாசம்' கோண்டாவில் வீதி,
இருபாலைச் சந்தி.
தற்போது: கனடா,
பூரண முகவரி தெரியாது.
எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி தனக்கும் எதிராளிக்கும் இடையில் 2005.02.09 ஆம் திகதியில் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை இரத்துச் செய்யகோரி இந் நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளததனால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும், இருப்பின் 2006 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற்கோப் பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதி அன்றி அல்லது அதன் முன்னர் நீவீர்.மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில், வழக்கானது மறுகட்சிகாரலில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளக்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப் படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும்விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

லிங்கா துரைராஜா — நீதிமன்றக் கட்டளைப்படி
வழக்காளியின் சட்டத்தரணி — து.சிறீமோகன்
பதிவாளர்

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பப் பதிவாளர்.
2005 ஆம் ஆண்டு, மார்கழி மாதம் 05 ஆம் நாளாகிய இன்று.

(43757)(30-13-16)

### அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 735 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 06-12-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4916858-4931269 |

லக்கினம் இடபம்

வெற்றி இலக்கங்கள் 14 26 37 53

ஜக்பொட் பரிசு ரூபா. 16,98,550/- வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 23,99,550/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,13,860 | 10/- | 31,38,600/- |
| 2.இலக்கங்கள் | 28,799 | 20/- | 5,75,980/- |
| 1.இல லக்கினம் | 28,550 | 30/- | 8,56,500/- |
| 2.இல லக்கினம் | 2,635 | 100/- | 2,63,500/- |
| 3.இலக்கங்கள் | 766 | 500/- | 3,83,000/- |
| 3.இல லக்கினம் | 69 | 5,000/- | 3,45,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 16,98,550/- | - |
| | | மொத்தம் | 59,62,580/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 70,14,830/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 70,14,830/-
தொடர் இல. 5856583 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 4920196-1-73 |
| திருகோணமலை | 4917914-7-29 |
| களுத்துறை | 4924051-1-97 |
| பதுளை | 4918615-8-62 |
| புத்தளம் | 4926035-3-88 |


**கோபாலையரின்**
தமிழ் இலக்கணப் பேரகராதி
17 தொகுதிகள்
**சேமமடு பொத்தகசாலை**
UG.52,பீப்பிள்ஸ் பார்க்,
கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.
(சி-46677)(30-13-16)

**KARAN'S ACADEMY**
ACHCHELU
2006ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கான புதிய வகுப்புக்கள் 10.12.2005 சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றன.
ENGLISH :-திரு.ம.பிரபாகரன்
SOCIAL :-செல்வி செ.சுகந்தினி
MATHS :-திரு.ம.பிரதீப்
SCIENCE :-செல்வி ப.ஜெயரூபா
- செல்வி செ.ஜெயந்தினி
RELIGION-செல்வி வை.சிவப்பிரியா
COMMERCE:-திரு.ம.செபதீபன்
TAMIL :செல்வி ச.அனுசாகரி
அனைத்து வகுப்புகளும் பகல் நேர வகுப்புகளாகவே நடைபெறும்.
-நிர்வாகி
(43761)(30-13-16)


### சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் அன்பளிப்பு

சாவகச்சேரி, டிசெ.8

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலைக்கு படையினரால் ஒரு தொகுதி மருந்து வகைகள் கடந்த வியாழக் கிழமை வழங்கப் பட்டன.

சாவகச்சேரி அரசினர் மாவட்ட வைத்தியசாலை வைத்தியதிகாரி ச.அம்பிகைபாகனிடம் இந்த மருந்துகள் கையளிக்கப் பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. (த-31)

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி தயாளினி ரகுநாதன் அவர்களின் தந்தையார்
**அமரர் சின்னத்துரை கனகராசா**
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**நலன்புரிக் கழகம்,**
**யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.**
(43860)(30-13-16)


### இயன்முறை சிகிச்சை உதவியாளருக்கான விண்ணப்பம் கோரல்

**(Physiotherapy Assistant)**

அடிப்படைத் தகைமைகள்:
- A/L உயிரியல் பிரிவிற்கு முன்னுரிமை
- O/L ஆங்கிலத்தில் சித்தியும், கணனி அறிவும்
- மேலதிக தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

வயதெல்லை: 20 - 35

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிக்கு நேர்முகத் தேர்வு இடம்பெறும். 1 வருடத்திற்கான பயிற்சி வகுப்புகள் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாயிலும், ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும். பயிற்சிக்காலக் கொடுப்பனவுகள் உண்டு. விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முடிவு திகதி 17.12.2005.

பெயர், விலாசம், தொலைபேசி எண் அடங்கிய விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி:
வைத்தியசாலைப் பணிப்பாளர்,
கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை,மானிப்பாய்.
(43759)(30-13-16)


### கண்ணீர் அஞ்சலி

நிர்மாண உத்தரவாத நிதியத்தின்
வடமாகாண கிளை முகாமையாளர்
(முன்னாள் பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்)
உயர்திரு
**கிருஷ்ணபிள்ளை துரைராஜா**

அவர்கள் 04.12.2005 அன்று காலமானதையிட்டு, எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு எமது நிறுவனத்தினதும் ஊழியர்களினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*றோட் என்சினியரிங் (பிறைவேற்) லிமிட்டட்,*
கணேசபுரம், கிளிநொச்சி.
(சி-46675) (25-30-13-16)


### வரவேற்பாளர் தேவை

*வரவேற்பாளர் தேவை 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். மும்மொழிகளில் பேசும் ஆற்றல் உடையவர்களுக்கும் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். தகைமைச் சான்றிதழ்களுடன் 09.12.2005 (வெள்ளிக்கிழமை) கீழ்கண்ட விலாசத்திற்கு நேரில் வரவும்.*
(சி-46671)(30-13-16)

**மனிதவள சேவை,**
**உதயன் பணிமனை,**
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

### வெளிவந்து விட்டது

**"சங்கமம்"** ஒரு வரலாற்றுக்காவியம்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 110 பாடசாலைகளின் வரலாற்றுத் தொகுப்பு
**த.சரத்பாபு**
உள்ளகப்பயில்வு ஆசிரியர் அணி-4
**பா.தனபாலன்**
உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி

நூல் கிடைக்குமிடம்
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 500.
(43746)(39-13-16-30)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மோசமடையும் களநிலைமை

புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கொடுத்த மிகக் குறுகிய கால காலக்கெடு பயனுள்ள முறையில் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

சமாதான முயற்சிகளையும் முன்நகர்த்தாமல், போர் வழியிலும் முனைப்புக் காட்டாமல் இரண்டுங்கெட்டான் நிலையில் நின்று இழுபடுகிறது - தடுமாறுகிறது - புதிய அரசு.

நீந்தத் தெரிந்தவனின் காலில் பாரிய கல்லைக் கட்டி அவனைக் கடலில் போட்டால் தேர்ந்தவனால் கூட நீந்த முடியாது. அது மாதிரி அமைதி வழித் தீர்வுக்கு விரோதமான பௌத்த, சிங்களப் பேரினவாதிகளை வாரி அணைத்துத் தம்முடன் கட்டிவைத்திருக்கும் இலங்கை அரசின் புதிய தலைவரால் அமைதி முயற்சி என்ற சாகரத்தை நீந்திக் கடக்க முடியாது. அதற்குப் பேரினவாதிகள் அவரை அனுமதிக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

முன்னைய ரணிலின் அரசு ஆட்சியில் இருந்த சமயம் புலனாய்வுப் பிரிவுச் சிப்பாய் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டாலேயே பெரிய ரகளை பண்ணும் - கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்துக்கு முன்னால் சவப்பெட்டியுடன் போய் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்யும் - இந்தப் பேரினவாதிகள் இப்போது கமுக்கென்று அமுக்கி வாசிக்கின்றார்கள்.

மூன்று நாட்களில் பதினைந்துக்கும் அதிக படையினர் - அதுவும் இந்த யுத்த நிறுத்த காலத்தில் - கொல்லப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாகவோ, கொழும்பு கோட்டை ரயில் நிலைய முன்றிலிலோ சிவப்புச் சட்டையோ அல்லது மஞ்சள் அங்கியோ ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. ஜனாதிபதி செயலகத்தையோ அல்லது புதிய ஜனாதிபதி தங்கியுள்ள அலரி மாளிகையையோ நோக்கி யாரும் பெருங்குழப்ப ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தவில்லை.

இன்று ஏற்பட்டுவரும் மோசமான நெருக்கடிக்கு விதை - வினை - விதைத்தவர்கள் தாங்களேதான் என்ற உண்மை புரிந்துகொண்டதால் அவர்கள் அமுக்கி வாசிக்கின்றார்கள்.

அமைதி முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியில் இருந்து நோர்வே தூக்கி வீசப்பட வேண்டும் என்று வற்புறுத்தியவர்கள் - வற்புறுத்துபவர்கள் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டாளிகளான சிவப்பு மற்றும் மஞ்சள் அங்கிக்காரர்கள். அதை அப்படியே ஏற்றுக் கொண்டார் ஜனாதிபதி மஹிந்த.

நோர்வேயை வீட்டுக்கு அனுப்பி விட்டு அந்த இடத்தை இந்தியாவுக்கு வழங்குவேன் என்று சூளுரைத்துக் கனவு கண்டார் இலங்கை ஜனாதிபதி. ஆனால், அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக நிலைமைகள் அமைந்துவிட்டன.

இந்தியாவே இலங்கை அரசுத் தரப்பை அழைத்து, இலங்கை விடயத்தில் இந்தியா அனுசரணைப் பணி வகிப்பதற்கு இடமேயில்லை என்று அடித்துக்கூறிவிட்டது. அமைதி முயற்சிகளைக் குழப்பாமல் நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்புடன் தொடர்ந்து அதனை முன்னெடுங்கள் என்று உறைக்கச் சொல்லி அனுப்பியிருக்கிறது இந்தியா.

போதாக்குறைக்கு தனது அனுசரணைப் பணியைத் தொடர்வதற்கு நோர்வேயும் உரிமையுடன் கூடிய சில நிபந்தனைகளை புதிய இலங்கை அரசுக்குத் தெரிவித்திருப்பதாக அறியவருகின்றது.

அமைதி முயற்சிகளில் நேரடியாக ஈடுபடுபவை இலங்கை அரசும், புலிகளும்தான். வெற்றியோ, தோல்வியோ, நல்ல முடிவோ, கூடாத பெறுபேறோ அதனை எட்டுவதற்கு இலங்கை - புலிகள் தரப்புகள்தான் இணங்கவேண்டும். எந்த முடிவு கிட்டினாலும் அதற்கு அந்த இரு தரப்புகள்தான் பொறுப்பு. அதை விடுத்து பேச்சு முயற்சிகளில் கிடைக்கும் வெற்றி, தோல்வி, பின்னடைவு, பாதிப்பு போன்றவற்றுக்கு அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேத் தரப்பையோ, அந்த நாட்டையோ திட்டித் தீர்க்கக் கூடாது. மோசமாக விமர்சிக்கக் கூடாது. நையாண்டி செய்யக் கூடாது. நோர்வேயின் அனுசரணைப் பணியை கண்ணை மூடிக்கொண்டு குறைகூறக்கூடாது. அதுவும் அரசுத் தரப்பில் அணி சேர்ந்திருப்போரிடமிருந்து இத்தகைய பகிரங்க விமர்சனங்கள் வருவது நிறுத்தப்பட வேண்டும். அதற்கு அரசு இணங்கினால் அனுசரணைப் பணியைத் தொடர்வது குறித்து ஆராயலாம் என்று நோர்வேத் தரப்பு இலங்கை அரசுக்கு சமிக்ஞை காட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஒரு புறம் ஜனாதிபதி மஹிந்த எதிர்பார்த்த இந்தியத் தரப்பு, அனுசரணைப் பணிக்கு வர மறுத்துவிட்டது. மறுபுறம் அவர் விரும்பாத நோர்வையையே அனுசரணைப் பணிக்கு தொடர்ந்து பயன்படுத்துமாறு இந்தியா வலியுறுத்துகிறது. அதேசமயம் அத்தகைய திட்டத்தை அவருடன் கூட்டுச் சேர்ந்த பேரினவாதிகள் கடுமையாக எதிர்க்கின்றார்கள். என்ன செய்வது என்று தெரியாத இக்கட்டில் அடுத்த காயை நகர்த்த முடியாமல் திணறுகிறார் புதிய ஜனாதிபதி.

களநிலைமையோ எதிர்பாராத வகையில் மேலும் மேலும் மோசமாகி வருகின்றது. புதிய அரசுத்தலைவர் ஆக்கபூர்வமாக ஏதேனும் செய்தாலேயன்றி நிலைமையில் முன்னேற்றம் ஏற்படப்போவதில்லை. இன்னும் சூழ்நிலை சீர்கெட்டுப்போகும் சாத்தியமே அதிகம் தென்படுகிறது.

இலங்கை அரசுத்தலைவர் - புதிய ஜனாதிபதி - அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமான ஏதேனும் அம்சங்களைச் செய்வதானால் முதலில் பேரினவாதிகளின் சந்தர்ப்பவாதப் பிடிக்குள் இருந்து அவர் வெளிவர வேண்டும். அதற்கும் வாய்ப்புகள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

இந்தப்பின்னணியில் அமைதியின் திசையை நோக்கி சூழ்நிலை மேம்படுவதற்குச் சாத்தியங்கள் அருகிவருகின்றன என்பதே இன்றைய கள யதார்த்தமாகும்.

# ஜி.சீ.ஈ.பரீட்சை ஏற்பாடுகள் தயார்: 25 ஆயிரம் பேர் தோற்றுகின்றனர்

கொழும்பு,டிசெ.8

ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் திங்களன்று ஆரம்பமாகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இம்முறை இந்தப் பரீட்சைக்கு பாடசாலைப் பரீட்சார்த்திகளாக 25 ஆயிரத்து 68 பேர் தோற்றுகின்றனர்.

எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை பரீட்சை தொடர்ந்து நடைபெறும். இதற்காக 185 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியான நிலையில் உள்ளன என்று திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெறும் எனவும் யாழ்.கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ்.மாவட்டத்தில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தால் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன - என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-13)

## ஆஸ்பத்திரி வீதி வீடொன்றில்

# இரு வாரங்களுக்கு முன் அகற்றப்பட்ட காவலரணுக்கு மீண்டும் புத்துயிர்!

குருநகர் டிசெ.8

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் கண்டி வீதிக்குச் சமீபமாக உள்ள வீடு ஒன்றில் காவலரணை அமைத்திருந்த படையினர் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் அங்கிருந்து விலகிச் சென்றனர். இப்போது அந்த வீட்டில் படையினர் மீண்டும் நிலை கொண்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் படையினருக்கெதிரான தாக்குதல்கள் அதிகரித்து வருவதையடுத்தே அக்காவலரணில் மீண்டும் படையினர் நிலை எடுத்துள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த வீட்டிலிருந்த காவலரணை அகற்றிய படையினர் சிலநாள்களிலேயே மீண்டும் காவலரண்களை அமைத்திருப்பது அப்பகுதியில் உள்ள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்பட்டது. (த-51)

# இணைந்த சேவை அலுவலருக்கு ஜனவரி தொடக்கம் இடம்மாற்றம்

தென்மராட்சி,டிசெ.8

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான 2006 ஆம் ஆண்டுக்கான இடம் மாற்றல் பட்டியல் வெளியாகியுள்ளது.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை இடம்மாற்றப் பட்டியலை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பியுள்ளார்.

இடம்மாற்றம் தொடர்பாக மேன்முறையீடுகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் இடம்மாற்றங்கள் 2006 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமெனவும் அறிவித்துள்ளார்.

முகாமை உதவியாளர் சேவையைச் சேர்ந்த 43 பேருக்கும் நூலகர் சேவையைச் சேர்ந்த 18 பேருக்கும் உள்ளூராட்சி உதவியாளர் சேவையைச் சேர்ந்த 22 பேருக்கும் இடம்மாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (த-117)

# தொழில்நுட்பக் கல்லூரிகளின் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு,டிசெ.8

தேசிய தொழில் பயிலுநர் தகைமைச் சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளுக்கு தொழில்நுட்பக் கல்லூரிகளினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள 36 தொழில் நுட்பக் கல்லூரிகளில் இப்பயிற்சிநெறிகள் இடம்பெறவுள்ளன. தமிழ்மொழி மூலம் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, சம்மாந்துறை ஆகிய தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.

ஒரு வருடத்தைக் கொண்டதான இப் பயிற்சிநெறிகளைக் கற்பவர்களுக்கு மாதாந்தம் 450 ரூபா உதவுதொகை வழங்கப்படும்.

அத்துடன், வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 600 மாணவர்களுக்கு மேற்கூறப்பட்ட கொடுப்பனவு மேலதிகமாக வருடத்திற்கு 2ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்மொழி மூலம் நீர்க்குழாய் பொருத்துநர், குளிரூட்டல் மற்றும் வாயு சீராக்கல், தச்சுவேலை, மோட்டார் சைக்கிள் திருத்துநர், கட்டட வேலை போன்ற பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் இரண்டு தடவைகளில் ஆறுபாடங்களில் சித்தியடைந்த 17 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# இரசாயனவியல் நூல் பல்கலையில் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் சங்கத்தின் "கெமிஸ்பியர்' (Chemisphere) எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இரசாயனவியல் சங்கத் தலைவர் பா.பாகுலேஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேலும் கௌரவ விருந்தினராக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் திருமதி ஆர்.மகேஸ்வரனும் கலந்துகொண்டனர்.

வரவேற்புரையினை யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் சங்கத்தின் பொருளாளர் சி.சிறிவிஜயேந்திரனும் போசகர் உரையை கலாநிதி மீனா செந்தில்நந்தனனும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை இரசாயனவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி ஜெ.பிறின்ஸ் ஜெயதேவன் வெளியிட்டு வைக்க பேராசிரியர் இ.குமாரவடிவேல் பெற்றுக்கொண்டார்.

நூலின் ஆய்வுரையை யாழ்.சர்வதேச உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத் தலைவர் பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியமும் ஏற்புரையை நூலின் இதழாசிரியரான செல்வி ராதிகா சிவராஜாவும் நிகழ்த்தினர்.

நிகழ்வின் இறுதியில் விஞ்ஞான பீட மாணவர்கள் மற்றும் நுண்கலைப்பீட மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், வணிகமுகாமைத்துவ பீடாதிபதி க.தேவராஜா மற்றும் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-12)

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே சுவரொட்டிப் பேட்டி

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பாடசாலை மாணவர்களிடையே சுவரொட்டிப் போட்டிகளை நடத்தவுள்ளது.

'சமத்துவமும் - சமாதானமும்' எனும் கருப்பொருளில் நடத்தவுள்ள இந்தச் சுவரொட்டிப் போட்டி மாணவர்களின் மனதில் சமாதானம் பற்றிய எண்ணக்கரு எவ்வகையில் உள்ளது என்பதை அறியும் நோக்கில் நடத்தப்படுகின்றது.

இதில் 10-12 வயதுடையோர் கீழ்ப்பிரிவாகவும் 13-15 வயதுடையோர் மத்தியபிரிவாகவும் 16-18 வயதுடையோர் மேற்பிரிவாகவும் போட்டியில் பங்குபற்றலாம்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைப் பாடசாலை அதிபர்களின் சிபார்சுடன் தத்தமது வலயக் கல்விப் பணிமனைகளில் ஒப்படைக்கலாம் என்றும் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறுவோருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-13)

## நாளை

கார்த்திகை 24
வெள்ளிக்கிழமை
09.12.2005
திதி: நவமி
பி.இ. : 03.10 வரை
நட்சத்திரம் : பூரட்டாதி
பின்னிரவு : 12.47 வரை
சுபநேரம் : 06.18- 07.48
ராகுகாலம் : 10.48 - 12.18
(யாவும் பழைய நேரப்படி)

# தவறுகள் ஏதுவுமே செய்யாத 200 குழந்தைகள் சிறைகளில்!

கொழும்பு,டிசெ.8

நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் அல்லது சிறைத்தண்டனைக்குட்பட்டு சிறை வைக்கப்படும் தாய்மாரோடு சிறையில் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 200 வரையில் உள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை வெலிக்கடைச் சிறைச்சாலையில் மாத்திரம் இவ்வாறு தாய்மாரோடு சிறைப்படுத்தப்பட்டுள்ள 32 குழந்தைகள் உள்ளன.

இவ்வாறான தாய்மார்கள் போதைப்பொருள் பரிமாறல்கள் மற்றும் போதைப்பொருள் விற்பனை தொடர்பாகவே சிறைவைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

சிறைச்சாலைக்குள் அக்குழந்தைகளின் உளநல மற்றும் உடல்நல விருத்தியை மேற்கொள்வதோ அன்றி முறையான போஷாக்கை வழங்குவதோ சாத்தியமற்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.

கைக்குழந்தைகளோடு சிறை சென்ற தாய்மார்கள் ஒருபுறமிருக்க, கர்ப்பிணிகளாகச் சிறைசெல்லும் பெண்கள் சிறையிலேயே குழந்தையைப் பிரசவிக்கும் சம்பவங்களும் இருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

குழந்தையொன்று தனது 5 வயது வரும் வரையில் தாயின் பராமரிப்பின் மத்தியில் வளர வேண்டியுள்ளமையால், சிறைத்தண்டனை பெறும் தாய்மாரிடமிருந்து குழந்தைகளை அப்புறப்படுத்த இயலாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (த-6)

## உதயவாக்கு

நேற்று என்பது ரத்து செய்யப்பட்ட ஒரு செக்! நாளை என்பது ஒரு பிரமசாரி நோட்டு! இன்று என்பது மட்டுமே ரொக்கப்பணம்.

- ஆண்டர்சன்.

## கருத்தரங்கும் - ஆசி வழங்கலும்

ஐ.டி.சி. மற்றும் கல்விசார் நிறுவனங்களும் இணைந்து நடத்தும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கும் சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்களின் ஆசி வழங்கலும்.

இடம்: **யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபம்**
காலம்: **10.12.2005 சனிக்கிழமை காலை 8 மணி**
**(கணிதம், விஞ்ஞானம்)**

கொழும்பு, யாழ்ப்பாணம் பிரபல கல்லூரிகளின் ஆசிரியர்கள் இணைந்து வழங்கும் பரீட்சை வினா எதிர்பார்ப்பும் வினா அணுகுமுறையும் பற்றிய கருத்தரங்கும், சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்களின் ஆசி வழங்கலும் இடம்பெறும்.

சகல மாணவர்களும் கலந்துகொள்ளுங்கள்.
கையேடுகளும் வழங்கப்படும்.

(43648)(21.14.15) **ஐ.டி.சி. நிறுவனம்.**

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு
## டோகா, கட்டார், டுபாய்

- பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD)
- களஞ்சியப் பாதுகாவலர் (STORE KEEPER)
- சமையல் செய்பவர் (COOK ASIAN / SOUTH INDIAN)
- இலக்றீசியன் (HOUSE ELECTRICANS)
- துப்புரவு செய்பவர்கள் (CLEANING LABOURERS)

## மலேசியாவில் வேலைவாய்ப்பு

- மரத்தளபாடம் செய்பவர்கள்
- உதிரிப்பாக உற்பத்தியாளர்கள்
- உற்பத்தி இயக்குநர்கள்
- துப்புரவுத் தொழிலாளர்கள்
- தையல் வேலை செய்பவர்கள்

மேற் குறிப்பிட்ட நாடுகளுக்கு குறுகிய காலத்தில் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**RAINBOW TRAVELS & TOURS**
**32-1 / 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 021 222 3237 , 0777 328219.**
**(அபிநயா நகை மாடத்துக்கு மேல்)**

குறிப்பு:- எமது ஸ்தாபனம் கொழும்பை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகின்றது.

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
## கேள்வி அறிவித்தல்-2006

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான பின்வரும் கடைகள் யாழ்ப்பாண மாநகரசபையால் கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விவரங்கள் பின்வருமாறு:

1) நடைபாதை அங்காடி
(வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகில்)
அ) குத்தகைக்காலம்: 2006.01.01-2006.12.31
ஆ) ஆகக் குறைந்த கேள்வித்தொகை: ரூபா 20,00,000/-.
இ) கேள்விப் பிணைப் பணம்: ரூபா 5000/-(மீளளிக்கக்கூடியது)
ஈ) கேள்விப் பத்திரப்பணம்: ரூபா 300/- (வற்வரி நீங்கலாக)

2) அ) நவீன சந்தை மேல்மாடி 26ஆம் இலக்கக்கடை
ஆ) ஆகக்குறைந்த கேள்வித்தொகை - ரூபா 750, 000/-
இ) கேள்விப்பிணைப்பணம்: ரூபா 5000/- (மீளளிக்கக்கூடியது)
ஈ) கேள்விப் பத்திரப்பணம்: ரூபா 300/- (வற்வரி நீங்கலாக)

3) கேள்வி விண்ணப்பங்கள் யாவும் அலுவலகத்தில் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

அ) கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி:
19.12.2006ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை
ஆ) கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:
19.12.2006 ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை
இ) கேள்விப்படிவங்கள் திறக்கப்படும் இறுதித் திகதி:
19.12.2006 ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரை

*மேலதிக விவரங்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**சி.வி.கே.சிவஞானம்**
ஆணையாளர்,
மாநகரசபை.

(சி-46662)(21.14.15)

### ஜனாதிபதியை சந்தித்தனர் ஐ.தே.கவினர்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தலைமையிலான அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினர்.

அரச நிறுவனங்களில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள்மீது மேற்கொள்ளப்படும் அரசியல் பழிவாங்கல்கள் மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கெதிரான நடவடிக்கை குறித்து இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் முறையிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது உறுதியளித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

### மருத்துவர் நியமனம்

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலைக்கு டாக்டர் அசீம் என்பவரை வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு நியமித்துள்ளது. இவர் கடந்த 2ஆம் திகதி தொடக்கம் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். (ஒ-31)

### பேராதனை பல்கலை. கலைமுதற் தேர்வு பரீட்சைகள்

பேராதனை பல்கலைக்ழக வெளிவாரி மாணவருக்கான கலை முதற்தேர்வு பரீட்சைகள் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 31ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள் ளன.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(ஒ117)

### பாடசாலைகளில் பிள்ளைநேயத்திட்டம்

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆரம்பக் கல்விப் பாடசாலைகள் அடுத்த ஆண்டு முதல் பிள்ளைநேய பாடசாலைகளின் திட்டத்திற்குள் உள்வாங்கப்படுகின்றன.

இத்திட்டத்தை யுனிசெவ் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆரம்பக் கல்விப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் சில பாடசாலைகள் பிள்ளைநேயப் பாடசாலைகள் திட்டத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு முதல் அனைத்துப் பாடசாலைகளும் இத்திட்டதிற்குள் கொண்டுவரப்படவுள்ளன. (ஒ13)

## கேள்வி அறிவித்தல்
### பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்

1. கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளரினால் 22.12.2005 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை *யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), பிரதம பொறியியலாளரிடம்* சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தை செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலு வலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப்பத்திரங்களை 08.12.2005 முதல் 21.12.2005 பிற்பகல் 3 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் ரூபா | ICTAD பதிவுத் தரம் |
|---|---|---|---|---|
| 01 | கொடிகாமம் மத்திய மருந்தகம், மகப்பேற்று விடுதி சீர்திருத்த வேலை (UNICEF WORKS) | 13,500.00 | 500.00 | M-8 அதற்கு மேலும் |

4. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாள்களில் அலுலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

*முக்கிய குறிப்பு*
கேள்விதாரருக்கு VAT சம்பந்தமாக எதுவித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

**எந்திரி க.குகநேசன்**
*பிரதம பொறியியலாளர்,*
*கட்டடங்கள் திணைக்களம் (மா),*
*யாழ்ப்பாணம்*

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-466640)(21.14.15)

## PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, NORTH EAST PROVINCIAL COUNCIL

### RECRUITMENT OF DEPUTY PROVINCIAL DIRECTOR OF INDIGENOUS MEDICINE

Applications are invited from physicians of the Srilanka Ayurvedic Medical Service with the following qualifications for appointment to the post of Deputy Provincial Director of Indigenous Medicine in the North East Province.

**No of positions:** 01

**Educational / Professional Qualifications:**

01. Be a Physician registered with the Ayurvedic Medical Council having obtained a Diploma with 1st or 2nd Class in Ayurvedic Siddha or Unani after following a five year course of study at an Ayurvedic Medical Institute recognized by the Government.

or

Be a Physician registered with the Ayurvedic Medical Council having obtained a Degree after following a course of study in Ayurvedic, Siddha or Unani at a recognized University, has subsequemtly completed one year internship.

02. Has obtained a certificate of a postgraduate Diploma or Higher Educational certificate of a recognized University.

03. Has possessed not less than 3 years experience in Hospital Administration.

04. Has completed 8 years satisfactory service in Grade II of the Ayurvedic Medical Service.

❖ Preference will be given to officers in Supra Grade of the Ayurvedic Medical Service

If no suitable Candidate is available with the above requirements action will be taken by the Provincial Public Service Commission to appoint a physician on acting basis with acceptable qualifications.

**Salary Scale:** 232,560/= - 10x8,160/= - 314,160/=

**Selection:** By an interview

Applications: Should be forwarded through the heads of Department to reach the Secretary, Provincial Public Service Commission, No.35, Mc Keyzer Road, Orr's Hill, Trincomalee on or before 20.12.2005

**V.P.Balasingham,**
*Secretary,*
*Provincial Public Service Commission,*
*North East Province.*

(C/46665)(42)

# சரத்தைக் களைந்துவிட்டு தரையில் குந்தி இருக்குமாறு கூறித் தாக்கினர்!

## சிறுப்பிட்டியில் படையினரால் தாக்கப்பட்டவர் பேட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.8

டிராக்டரில் வந்த என்னை இறக்கி, தரையில் குந்தி இருக்குமாறு கூறிய படையினர் கொட்டன்களால் என்னைக் கண்டபடி தாக்கினர்.

சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த கந்தன் பத்மநாதன் (வயது 44) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறுப்பிட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் ஆறு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் இவர் 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

சிறுப்பிட்டியிலிருந்து எனது வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தசமயம், வீதியில் பீதியுடன் ஓடிக்கொண்டிருந்த பாடசாலைச் சிறுமிகளையும் எனது டிராக்டர் பெட்டியினுள் ஏற்றிக்கொண்டு போனேன். அப்போது சிறுப்பிட்டிச் சந்தியில் உள்ள பற்றை மறைவில் இருந்துவந்த இராணுவத்தினர் சிலர் என்னை வழிமறித்தனர்.

என்னுடன் கூடவந்த பாடசாலைச் சிறுமிகளை இறங்கி ஓடுமாறு கூறிவிட்டு என்னை இறங்கி சரத்தைக் களைந்துவிட்டுத் தரையில் குந்தி இருக்குமாறு பணித்தனர். பின்னர், கொட்டன்களினாலும் 'பெல்டி'னாலும் கண்டபடி என்னைத் தாக்கினார்கள். 'அடிக்காதீர்கள்' எனக் கதறியும் அவர்கள் கேட்கவில்லை. எனக்குப் பலத்த அடிகாயங்கள் ஏற்பட்டன. பின்னர் அயலவர்கள் என்னை ஆஸ்பத்தியில் சேர்த்தனர் - என்றார். (ஐ-13)

## பின்தங்கிய மூன்று பாடசாலைகள் கல்வி அபிவிருத்திக்குத் தெரிவு

தென்மராட்சி கல்வி வலயத்தில் கல்வியில் மிகவும் பின்தங்கிய மூன்று பாடசாலைகள் மாகாணக் கல்வி அமைச்சினால் கல்விக்கான மாதிரிப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தியினை மேம்படுத்த வலயக் கல்வி அலுவலகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே கல்வி அபிவிருத்தி மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடையே முன்னோடிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு அவை மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் பாடங்கள் தொடர்பாக ஆசிரியர்கள் மூலம் உரிய விளக்கங்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகள் காணப்படும் பட்சத்தில் அடுத்த வருடம் மேலும் சில பாடசாலைகள் தெரிவுசெய்யப்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.(த-117)

## வாக்குச்சாவடியில் தொலைந்த தளபாடங்களை உரியவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.8

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முகமாலையில் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்டு பின்னர் காணாமற்போன தளபாடங்களை உரியவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தலைமைத் தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளேன்.

- இவ்வாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

முகமாலை கொத்தணி வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் உரியவர்களுக்குத் திருப்பிக்கொடுக்கப்படவில்லை எனக் கூறப்படுவது குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முகமாலை வாக்குச்சாவடியில் பயன்படுத்தவென பெருமளவான கதிரைகள், தனியார் நிறுவனங்களிடமும் பாடசாலைகளிலும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி, கொடிகாமம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றிலிருந்தே மேற்படி கடமைகளுக்காகக் கதிரை, மேசைகள் எடுக்கப்பட்டன.

அவற்றுள் 20 இரும்பு மேசைகள், 45 இரும்புக் கதிரைகள், 5 பிளாஸ்ரிக் கதிரைகள் என்பன காணாமற்போயுள்ளன. இப்பொருள்களை உரியவர்களுக்குத் திருப்பிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாகத் தலைமைத் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இம்முறை தேர்தல் வாக்களிப்பு தினத்திலிருந்து முகமாலைக் கொத்தணி வாக்குச்சாவடிக்குப் பொதுமக்கள் செல்லவில்லை. எனினும், இந்தக் கதிரை, மேசைகள் எவ்வாறு காணாமற்போயுள்ளன என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-204-203)

## கூட்டுறவுச் சங்க நெறியாளர்களுக்கு இன்றும் நாளையும் பயிற்சிநெறி

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழுவினருக்கான இரண்டு நாள் பயிற்சிநெறி இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களமும் மாவட்டக் கூட்டுறவுச் சபையும் இணைந்து இந்தப் பயிற்சிநெறியை நடத்தவுள்ளன என்று மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.ஐயாத்துரை தெரிவித்தார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுக் கல்லூரியின் விரிவுரையாளர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் வணிகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் இந்தப் பயிற்சிநெறியில் கலந்துகொண்டு விரிவுரை ஆற்றவுள்ளனர். (ஐ-17)



செந்தமிழ் செம்மல் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை ஞாபகார்த்தமாக அவர் தொடர்பான வாழ்க்கை வரலாறு அடங்கிய நூல் ஒன்று சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரால் வெளியிடப்பட்டது.

நிலையத் தலைவர் நா.தங்கராசாநூல் வெளியிடுவதையும் அவரது உறவினர் அதனைப் பெற்றுக்கொள்வதனையும் படத்தில் காணலாம். (ஐ-410)

## சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு வகுப்பறைத் தொகுதி

தென்மராட்சி,டிசெ.8

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்குப் புதிய மாடி வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன (எஸ்.டி.சி.) நிறுவனத்தினர் இந்த வகுப்பறைத் தொகுகளை அமைக்கவுள்ளனர்.

இப்பாடசாலைக்கென வெளிநாடுகளில் உள்ள சாவகச்சேரி மக்களால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் சாவகச்சேரி பெரிய அரசடி, தாமோதரம்பிள்ளை வீதியில் கொள்வனவு செய்யப்பட்ட 40 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் இக்கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன என்று பாடசாலை அதிபர் வ.கயிலேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-117)

## மாணவர் கௌரவிப்பு வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் சண்டிலிப்பாய் கோட்டத்தில் இந்த ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கவுள்ளது.

கழகத்தின் கல்விசார் சேவைத் திட்டத்தின்கீழ் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இந்தப் பாராட்டு வைபவம் இடம்பெறவுள்ளது. பிரதம விருநத்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸும் கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.தனபாலசிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக 306பி1 கல்வி மாவட்டத் தலைவர் லயன் எஸ்.யோகசிங்கமும் கலந்துகொள்வர். (ஐ-202)

## வங்கியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ். மாவட்ட வங்கிகளில் தற்பொழுது சேவையிலுள்ள ஊழியர்கள் தமது வங்கிகளிலிருந்து இளைப்பாறிய அல்லது வேறு வழிகளுக்கு விலகிச் சென்ற மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

இக்கௌரவிப்பு வைபவம் எதிர்வரும் 15ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் கலந்துகொள்வார். (ஐ-202)

## சைக்கிள் கொள்வனவுக்கான கடன்தொகை

தென்மராட்சி,டிசெ.8

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் மிதிவண்டி கொள்வனவு செய்வதற்கான கடன் தொகை 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் டீ.திஸாநாயக்கா இதற்கான சுற்றறிக்கையைச் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

முன்னர் வழங்கப்பட்ட மிதிவண்டிக் கடன் தொகை 3 ஆயிரம் ரூபாவில் இருந்து 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார். (ஐ-117)

## தபாலக ஊழியர் சிரமதானம்

அரியாலை,டிசெ.8

யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் நேற்றுமுன்தினம் பெரும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். தபாலகத்தின் முன்பக்கப் பகுதியில் அடர்ந்து வளர்ந்திருந்த பற்றைகள், பூண்டுகள் சிரமதானம் மூலம் அகற்றப்பட்டன.

தபால் தினத்தை ஒட்டியே தபாலக ஊழியர்கள் ஒன்றுசேர்ந்து இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சிரமதான நிகழ்வில் தபாலக வளாகப் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (ஐ-117)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## தென்மராட்சி தெற்கு வயல்களில் பயிர் அழிவு

தென்மராட்சி,டிசெ.8

அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் 65 வீதமான நெற்பயிர்கள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளன.

பயிர் அழிவு விவரங்கள் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களால் மதிப்பிடப்பட்டுள்ளன. (ஐ-117)

## மரியன்னை ஆலயத்தில் விசேட வழிபாடு

யாழ்ப்பாணம்,டிசெ.8

தும்பளை புனித மரியன்னை ஆலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு விசேட பூசை, வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து மாதாவின் திருச்சொருவப் பவனி நடைபெறும்.

பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் பங்குத் தந்தை அருட்திரு.ப.இருதயதாஸ் தலைமையில் நடைபெறும். (ஐ-204)

## கோவிலாக்கண்டியில் மண் அகழ்வு

தென்மராட்சி,டிசெ.8

நாவற்குழி - கோவிலாக்கண்டிக் கடற்கரையை அண்டிய பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இரவு பகலாகப் பெருமளவு வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் இதனைத் தடுக்கமுடியாதநிலை உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மண் அகழ்வினால் கடல் ஏரிநீர் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-117)

# SAAMSTECH இன் ஆங்கில பயிற்சி

SAAMSTECH இன் பயிற்சி மூலமாக் இலகுவாக ஆங்கிலத்தினை கதைக்கக்கூடியதற்கான காரணம் அதன் பாடத்திட்டமே. இன்றுள்ள ஏனைய கற்பித்தல்களில் தரப்படும் இலக்கணரீதியான சிந்தனை கதைத்தலைக்கடினப்படுத்துகிறது. எந்தவொரு மொழியாயினும் முதலில் கதைக்கப்படல் வேண்டும். பழக்கப்படுத்தல் மூலமான கதைத்தல் ஊடாக எவரும் இலகுவாக ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறலாம்.

## SAAMSTECH இன் ஆங்கில பயிற்சிநெறி

**1. அடிப்படை வசனங்கள்** : முதல் சில நாள் பயிற்சியில் எந்த வசனத்தினதும் அடிப்படை வசனத்தினை இலக்கண சிந்தனையின்றி வேகமாக உருவாக்குவதற்கான பயிற்சி வழங்கப்படுகிறது.

**2. பழக்கப்படுத்தல்** : வசனப்பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியால் பெரிய வசனங்களின் வசன உருவாக்க வேகம் அதிகரிக்கப்படுகிறது

**3. சொல்வளம்** : அன்றாட வசனங்களின் கிரகித்தல் ஊடான பயிற்சி மூலமாக கதைத்தலுக்கான சொல்வளம் விருத்திசெய்யப்படுகிறது

**4. விருத்தியாக்கம்** : அன்றாட வசனங்களை அடிப்படையாகக்கொண்ட பழக்கப்படுத்தல் மூலம் அடிப்படைவசனங்களை பெரிய வசனங்களாக விருத்தியாக்கம் செய்தல் பயிற்றுவிக்கப்படுகிறது. இதன் முடிவில் எந்தவொரு பெரிய வசனமும் இலகுவாக உருவாக்கப்பயிற்றுவிக்கப்படுகிறது.

**5. பிரயோகங்கள்** : நாம் சொல்லும் எந்தவொரு பெரிய வசனத்தினையும் உருவாக்க முடியுமாயின் ஆங்கிலத்தினை நாம் கதைக்க முடியும் என நினைப்பது தவறு. கதைத்தலின்போது நாம் தனித்தனி வசனங்களாக சொல்வது இல்லை. வசன அல்லது வசன துண்டங்களின் தொடர்ச்சியான அடுக்கலே கதைத்தல். இதற்கு பாடசாலைகளிலோ அல்லது தனியார் வகுப்புக்களில் பொதுவாக கற்பிக்கப்படாத பிரயோகங்களே அவசியமானதாகும். SAAMSTECH பாடநெறியில் பிரயோகங்கள் கற்பிக்கப்படுகிறது

**6. கேட்டல்** : வசன, வசன துண்டங்களின் தொடர்ச்சியான அடுக்கல் மூலமும் கதைக்க முடியாது. மொழிமாற்றம் செய்யலாம். அதாவது தமிழில் தெரிந்த எந்தவொரு தொடர்ச்சியான வசனத்தொடரையும் ஆங்கிலத்தில் சொல்லலாம். இங்கு வசனம் என்னவென்று தெரியும். ஆனால் கதைக்கும்போது வசனம் என்னவென்று தெரியாது. மனதில் எழுகின்ற சிந்தனை தொடர்ச்சியாக ஆங்கிலத்தில் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு கேட்டல் ஊடான இசைவாக்கமும் அவசியமாகும். SAAMSTECH இன் பயிற்சியில் செய்திகள் மற்றும் அறிக்கைகளை கொண்டு அமெரிக்கா மற்றும் இங்கிலாந்திலேயே உருவாக்கப்படும் கற்றலுக்கான ஒலிப்பயிற்சி கதைத்தலுக்கான இசைவாக்கத்தினை ஏற்படுத்துகிறது

**7. இலக்கணம்** : மற்ற இடங்களில் முதலில் இலக்கணம் கற்பிக்கப்படுகிறது. கதைப்பதற்கு முன்னர் ஒரு மொழியின் இலக்கணமானது புரிந்துகொள்ள முடியாது. அத்துடன் இலக்கணசிந்தனை ஏற்பட்டால் அதன்பின் கதைக்க முடியாது. SAAMSTECH இன் கற்பித்தலில் முதலில் ஆங்கிலத்தில் கதைக்கவைத்து அதன் பின்னரே இலக்கண கல்வி வழங்கப்படுகிறது. இதனால் புரிந்துகொள்ளல் இலகுவாக்கப்படுகிறது. இலக்கணத்தில் முழுமையான தேர்ச்சி பெற முடிகிறது.

SAAMSTECH இன் ஆங்கில பயிற்சிநெறியானது வழக்கமமான கற்பித்தலைப் போன்றன்றி இலகுவானதும் அதிக எழுத்துப்பயிற்சிகளற்றதுமாகும். சிறு குழந்தைகள் தாய்மொழியை கற்பதை அடிப்படையாக கொண்ட இக்கற்கை மூலமாக அதிக எழுத்துவேலைகள், வீட்டுப்பயிற்சிகள், பரீட்சைகள் இன்றி வகுப்புகளில் கலந்துகொள்வதால் மட்டுமே தேர்ச்சி பெற முடியும்.

## பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில சிறப்பு வகுப்பு

வரும் பாடசாலை விடுமுறையில் உங்கள் பிள்ளைகள் SAAMSTECH பாடவிதானம் மூலம் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற இது அரிய சந்தர்ப்பம்.

ஆரம்பம் : 12.12.2005
காலம் : 3 வாரங்கள்
கட்டணம் : ரூபா 1500/-

காலை மற்றும் மாலை பிரிவுகள். 7 முதல் 10 மற்றும் 11 முதல் 13 ஆம் வகுப்புகளுக்கு தனித்தனி பிரிவுகள். நேரடி வகுப்பும் குழுப்பயிற்சியும் ஒலிப்பயிற்சியும். பாட அலகுகள் இலவசம். பயிற்சி முடிவில் சான்றிதழ்.

**விசேட சலுகை**
இன்றும் நாளையும் பதிவு செய்வோருக்கு பாடக்கட்டணம் ரூபா 1000 மட்டும்.

பதிவுகளுக்கு
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna 021 - 4591571
233/4, Kasthuriar Road, Jaffna 021 - 2229505

## SAAMSTECH இன் ஆங்கிலம்

அரச மற்றும் தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர்கள், வீட்டுப்பெண்கள், பாடசாலை மாணவர்கள்

**தனியான வகுப்புக்கள்**

ஆரம்பம் : இந்த வாரம்
காலம் : 3 மாதங்கள்
கட்டணம் : ரூபா 3000/-

காலை, மாலை மற்றும் சனி ஞாயிறு பிரிவுகள். நேரடி வகுப்பும் குழுப்பயிற்சியும் ஒலிப்பயிற்சியும். பாட அலகுகள் இலவசம். பயிற்சி முடிவில் சான்றிதழ்.

**விசேட சலுகை**
இன்றும் நாளையும் பதிவு செய்வோருக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள் மற்றும் CD முற்றிலும் இலவசம்

பதிவுகளுக்கு
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna 021 - 4591571
233/4, Kasthuriar Road, Jaffna 021 - 2229505

## SAAMSTECH இன் WEB & INTERNET

பாடசாலைகள், அரச தனியார் அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள், மற்றும் சர்வதேச நிறுவனங்களின் இணையத்தேவையை பூர்த்திசெய்யும் வகையில்

**இணையதள வடிவமைப்பு பயிற்சிநெறி**

காலம் : 1 மாதம்
கட்டணம் : ரூபா 3000/-

பாட அலகுகள் : Internet Fundamental, Web Fundamental, Front Page, Dream Weaver HTML, CSS, Jaca Script, Server Scripting, e-commerce, e-business and more......

பாடநெறியின் முடிவில் சுயமாக இணையதளங்களை வடிவமைக்கலாம், இணையதளமூடான வியாபாரங்களை நடாத்தலாம், உலகளாவிய அளவில் அதிக ஊதியத்துடன் தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : பாடநெறியின் முடிவில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறுவோருக்கு எமது இணையதள பிரிவில் பணிநியமனம்

**விசேட சலுகை**
இன்றும் நாளையும் பதிவு செய்வோருக்கு விரும்பிய பெயரில் ரூபா 10,000/- பெறுமதியான .COM இணையதளம் மற்றும் ஒரு வருடத்துக்கான HOSTING சேவை என்பன முற்றிலும் இலவசம்

பதிவுகளுக்கு
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna 021 - 4591571
233/4, Kasthuriar Road, Jaffna 021 - 2229505

## SAAMSTECH இன் பயிற்சியும் பணிநியமனமும்
### ஆசிரியர்/அலுவலர் பயிற்சி கல்லூரி

SAAMSTECH இன் உலகளாவிய நவீன தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கு அலுவலர்களையும் ஆங்கில ஆசிரியர்களையும் தயார் செய்வதற்கான பயிற்சிநெறி

**இப்பயிற்சியின் முடிவில் ஆசிரிய, அலுவலக, தகவல் தொழில்நுட்ப, கல்வி, பத்திரிகை, மற்றும் நிர்வாக செயற்பாடுகளில் பணிநியமனம்.**

**கல்வித்தகுதி** : க.பொ.த உயர்தரம் **கட்டணம்** : ரூபா 12000/

**பிரிவுகள் :** கிழமை (3 மாதம்) , சனி.ஞாயிறு (4 மாதம்) மற்றும் மாலை (5/6 மாதம்) (மாலை வகுப்புகளில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பணிபுரிவோருக்குமே அனுமதி)

பயிற்சியானது 200 முதல் 260 மணிநேர வகுப்புகளையும் **4 Assignments** இனையும் சொல்வள பயிற்சிக்கான 200 பக்க மொழிமாற்றத்தினையும் கொண்டிருக்கும். சொல்வள பயிற்சிக்காக ரூபா 6000/- ஊதியம் வழங்கப்படும்)

**வேலை இல்லை என்ற கவலை வேண்டாம்!!!**
**ஆங்கிலத்தினை விருத்திசெய்து பிடித்தமான துறையினை தெரிவுசெய்து பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் இதுவே.**

முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒரு பிரிவில் 40 பேரே சேர்த்துக்கொள்ளப்படுவர்

**அனுமதிக்கு சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்**

# SAAMSTECH

841, Hospital Road, Jaffna. 021 - 4591571
233/4, Kasthuriar Road, Jaffna 021 - 2229505

# ஒட்டுசுட்டான் பிரிவிலுள்ள குளங்கள் அடுத்த ஆண்டிலாவது திருத்தப்படுமா?

## கவலையுடன் கேட்கின்றனர் விவசாயிகள்

ஒட்டுசுட்டான்,டிசெ.8

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உடைப்பெடுத்த நிலையிலும் மிகநீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது தூர்ந்தநிலையிலும் உள்ள குளங்கள் அடுத்த ஆண்டிலாவது புனரமைக்கப்படுமா என விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சுமார் 200 இற்கு மேற்பட்ட குளங்கள் இருந்தபோதிலும் குறிப்பிட்ட ஒருசில குளங்களின் கீழ்தான் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. அவைகளும் புனரமைக்கப்படாது தூர்ந்த நிலையில் உள்ளன. இதனால் நீரின் கொள்ளளவு குறைந்துள்ளது. இந்த நிலையில் விவசாயத்தினை முழுமையாக மேற்கொள்ளமுடிவதில்லை.

முத்தையன்கட்டுக் குளநீர் பாயும் இடங்களைத் தவிர ஏனைய கிராமங்களில் உள்ள பாரிய, சிறிய குளங்கள் பல ஆண்டுகளாக உடைப்பெடுத்த நிலையிலேயே உள்ளன. அந்தக் குளங்களின் கீழ் பல நூறு ஏக்கர் காணிகள் தரிசாக உள்ளன.

இதனால், மக்கள் விவசாயத்தினை மேற்கொள்ளமுடியாதநிலை ஏற்படுகிறது. இந்தப் பிரதேசத்தில் உள்ள குளங்கள் புனரமைப்புக்கெனத் தெரிவுசெய்யப்படுகின்றபோதிலும் பின்பு வேறு இடங்களுக்கு அவை மாற்றப்படுகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, அடுத்த வருடத்திலாவது ஒட்டுசுட்டான் பிரிவில் உள்ள குளங்களைச் சிறந்த முறையில் புனரமைத்து விவசாயிகளுக்கு நன்மை கிடைக்க உரிய தரப்பினர் வழிசெய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-341)

## சைக்கிள்கள் அன்பளிப்பு

ஒட்டுசுட்டான்,டிசெ.8

மாங்குளம் ஒலுமடு கிராமியப் பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத் தொழிற்பயிற்சி பெறும் மாணவர்களுக்குச் சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

உலகக் கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிராமிய பொருளாதாரக் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் ஒலுமடு பயிற்சிக் கல்லூரியில் கட்டட வேலைப் பயிற்சி பெறும் 23 மாணவர்களுக்கே கடந்த 30ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (த-341)



தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 51ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சமூக, பொருளாதார அபிவிருத்தி வங்கியின் மன்னார் கிளையினால் முழங்காவில் இரணைமாதாநகர்ப் பகுதியில் அமைந்துள்ள சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் பராமரிப்பில் உள்ள 190 சிறார்களுக்கு எதிர்காலச் சிறார் சேமிப்புக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. சேமிப்புக் கையேட்டியினையும் உண்டியல்களையும் சொக்கலிங்கம் பூங்கா நிர்வாகி பிள்ளைகளுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)




## கிளிநொச்சியில் சனியன்று மனித உரிமைகள் தினநிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.8

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் (NESOHR) நடத்தும் சர்வதேச மனித உரிமைகள் தினம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மனித உரிமைகள் செயலகம் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் உரைகள், 'இனங்களின் சுயநிர்ணய உரிமை, உலக அமைதிக்குப் பங்களிக்கும்' என்னும் தலைப்பில் குழு விவாதம் என்பன இடம்பெறும். (த-202)

## கிளிநொச்சி நகர வீதிகளில் கட்டாக்காலிகளால் தொல்லை!

பரந்தன்,டிசெ.8

இரணைமடுச் சந்தியில் இருந்து கரடிப்போக்குச் சந்திவரை உள்ள ஏ-9 பிரதான வீதியிலும் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து புதுமுறிப்புச் சந்தி வரையுமுள்ள வீதியிலும் பரந்தன் - முல்லைத்தீவு பிரதானசாலை தருமபுரம் பகுதியிலும் கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக இரவுவேளைகளில் படுத்து உறங்குகின்றன.

இதனால், இவ்வீதிகளில் பயணிக்கும் அனைவரும் நாளாந்தம் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகிவருவதுடன், வீதி விபத்துகளும் ஏற்பட்டுவருகின்றன.

வாகனச்சாரதிகள் தொடக்கம் பாதசாரிகள் வரை பல சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

எனவே, கட்டாக்காலி கால்நடைகளை கால்நடைகளின் உரிமையாளர்கள் கட்டிப் பாதுகாக்காதவிடத்து சம்பந்தப்பட்ட திணைக்களம் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-352)

## ஒதியமலையில் படுகொலையுண்ட பொதுமக்களுக்கு நினைவஞ்சலி

ஒட்டுசுட்டான்,டிசெ.8

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் 1984ஆம் ஆண்டு ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ்மக்களின் 21ஆம் ஆண்டு நினைவு நாள் கடந்த 3ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்வில் பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியினை மணலாறு களமுனைப் பொறுப்பாளர் வசந்தன் ஏற்றிவைத்தார். ஒதியமலை கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர் இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் சிறப்புரைகளை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் தண்டுவான பிரதேசப் பொறுப்பாளர் யோகன் ஆகியோர் நிகழ்த்தினர். (த-341)

## வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன

முல்லைத்தீவு,டிசெ.8

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு 'கெயர்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் சங்க சமாசம் 25 வெளியிணைப்பு இயந்திரங்களை வழங்கியது.

இந்நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சங்கச் சமாசத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா, உபதலைவர் இ.தணிகாசலம், செயலாளர் க.செல்வா மற்றும் சமாசப் பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-204)

## மாயவனூர் வீட்டுத்திட்டக் குடும்பங்கள் நிவாரண வழங்கலில் புறக்கணிப்பாம்

பரந்தன்,டிசெ.8

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாயவனூர் கிராமத்தில் 10 வீட்டுத்திட்டத்தில் 72 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கலில் புறக்கணிப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாயவனூர் கிராமத்தில் '110 வீட்டுத்திட்டம்' என்ற குடியிருப்பில் பலகாலமாக 72 குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றன.

இக்கிராமத்தில் இருக்கும் மக்களுக்குச் சொந்தக் காணி இல்லாத காரணத்தினால் அரசால் வழங்கப்படும் உதவிகளில் இவர்கள் புறந்தள்ளப்பட்டு வருகின்றார்கள் என்று கவலை தெரிவிக்கப்பட்டது.

அண்மை நாள்களாகப் பெய்தமழை காரணமாக பல வீடுகளின் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு வெள்ள நிவாரணமாக எதுவித உதவியும் வழங்கத் தொண்டு நிறுவனங்களும் முன்வரவில்லை என்றும் கூறப்பட்டது.

இங்குள்ள மக்கள் பெரும்பாலும் கூலி வேலை செய்தே பிழைப்பு நடத்திவந்தனர். இந்த நிலையில் வட்டக்கச்சிப் பகுதியில் விவசாயிகள் பலர் பெரும்போக நெற்செய்கையை இம்முறை கைவிட்டதனால் கூலி வேலையும் இன்றி இந்த மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இவர்களுக்கு நிவாரண உதவிகளாவது வழங்கப்படவேண்டியது அவசியம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-352)



மாவீரர் தினத்தையொட்டி கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுப் பந்தலில் மாவீரர்களின் திருவுருவப்படத்தை முதலாவது படத்தில் காணலாம்.

இந்த நினைவுப்பந்தல் திறந்துவைக்கப்பட்ட நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் க.செல்வன் தேசியக்கொடி ஏற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: இ.தனபாலசிங்கம்)

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்
07 - 08 -1923
பரந்தாமனின் அடியில்
23 - 11 - 2001

திதி: 08.12.2005

குடும்பத்தின் குலவிளக்காய்
வாழ்ந்த அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் நாலு மறைந்தாலும்
உங்கள் அன்பு முகம் தெரியுதையா!
இனிய குரல் கேட்குதையா!
ஒளி விளக்காய் வாழ்ந்தவரே!
மறப்போமா நினைவுகளை...

அமரர்
முத்தையா சதானந்தன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

(43626)(88)

கற்கோவளம்,
பருத்தித்துறை.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
22
03
1936

விண்ணில்
08
11
2005

அமரர்
தில்லையம்பலம் சிறிகாந்தா

கண்ணை இமை காப்பதுபோல் காத்து
எங்களின் நல்வாழ்விற்கு வழி காட்டிய
அகல் விளக்கு அணைந்ததுவோ!
அப்பா என்று ஆசையுடன் அழைக்க யாருளரோ? -இவ்வுலகில்
அறிவுப்பசி களைந்து அகிலத்தில் மாந்தரென வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வம் மறைந்து திங்களொன்று கழிந்ததுவே!
உத்தமரே உங்கள் பூதவுடல் பிரிந்தாலும்
நீங்கள் எமக்குள்ளே வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(43703)(52)

50/6, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 011 255 9390, 0714816072

குடும்பத்தினர்.


# கிராம அலுவலர்கள் இடமாற்றம்

வலி.வடக்கு டிசெ.8

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கப் படவுள்ளது.

இதற்கான பட்டியல் யாழ். அரசாங்க அதிப ரால் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பதினைந்து வருடங்களின் பின்னர் பாரிய இடமாற்றம் தற்போது வழங்கப்படுகின்றது.

இந்த இடமாற்றம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பணியாற்றும் கிராம அலுவலர் எவரும் இட மாற்றம் செய்யப்படவில்லை.

தொடர்ச்சியாக ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் அல்லது உதவி அரசாங்க அதிபர் பிரி வில் பத்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றி யவர்களும் 55 வயதுக்கு உட்பட்டவர்களும் இடமாற்றப் பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இடப் பெயர்வு காரணமாக வன்னி மாவட்டத்தில் தற்காலி கமாக இடமாற்றம் பெற்றுச்சென்றவர்களும் இடமாற்றப் படவில்லை.

தீவகத்தை சொந்த இடமாகக் கொண்டு கடமையாற்றிய கிராம அலுவலர்கள் பலரும் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குஇடமாற்றம் செய்யபட்டுள்ளனர்.

(ஒ- 86)

# முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை

வடக்கு கிழக்கு மாகாணப் பொதுச்சேவையின் முகாமைத்துவ உதவியாளர் (கைத்தொழில்) வகுப்பு ஐஐ பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணி முதல் 11 மணி வரை நடைபெறவுள் ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திற்கு சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். இப்பரீட்சை கடந்த 4 ஆம் திகதி நடைபெற இருந்தது. பின்னர் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ- 204)

## அடுத்த ஆண்டுக்கான கல்வி அபிவிருத்திக்கு ரூ. 25 மில்லியன் நிதி

அடுத்த ஆண்டுக்கான யாழ். மாவட்ட கல்வி அபிவிருத்திக்கு யுனிசெவ் நிறுவனம் 2 கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியின் மூலம் யாழ். மாவட்டத்தில் இழந்த கல்வியை மீட்டெடுத்தல், நூலக வசதிகள், பாடசாலைகளில் மாணவர்களுக்குத் தேவையான கல்வி உபகரணங்களை வழங்குதல், குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டின் முற்பகுதியில் இத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஒ -13)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17
03
1932



உதிர்வு
19
11
2004

வல்லிபுரம் கிருஷ்ணசாமி
(உரிமையாளர்–விநாயகா மோட்டார் வேக்ஸ்)
மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி
திதி: பூர்வபட்ச அட்டமி 08.12.2005 வியாழக்கிழமை

பிள்ளைகளைப் பெற்றெடுத்து பாசமுடன் வளர்த்திட்டு
பள்ளிக் கல்வி முடித்து இந்தப் பார்பேச வேண்டும் மென்றோ
உள்ளமெல்லாம் உயர்வினிலே ஒரு நொடியும் உழைத்தெங்கள்
நல்வாழ்வு தான் கண்டீர் ஞாலமதில் குறையின்றி
வள்ளலென வாழ்வினிலே வாயார உமைப் பேச
கள்ளமிலாச் சிந்தையாலே கவர்ந்திழுத்தீர் எங்கள் அப்பா
ஆண்டொன்று ஆனதுவோ ஆறாத மனத்தினராய்
ஆத்ம சாந்திதனை வேண்டி நாம் இங்கு நிற்போம்.

(43581)(57)

தற்காலிக முகவரி:
"கோகுலம்" காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

-குடும்பத்தினர்.




# தும்பளை புனித மரியன்னை ஆலயம் கட்டப்பட்டு 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவை

## முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பிதழ் (1880–2005) – [08.12.2005]



### ஆயரின் ஆசிச்செய்தி



தும்பளை புனித மரியாள் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவில் வாழ்த்துக்களையும் ஆசீரையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். பருத்தித்துறையிலுள்ள மிகப் பழைய ஆலயமான இவ்வாலயம் கடந்த 125 ஆண்டுகளாக இப்பகுதி வாழ் மக்களின் விசுவாசத்தின் சான்றாகவும் கத்தோலிக்க மக்கள் அனைவரையும் இணைக்கும் ஓர் இடமாகவும் விளங்கி வந்திருக்கின்றது. இவர்களின் இந்த விசுவாச வெளிப்பாட்டின் சான்றாக விளங்கும் இவ்வாலயம் 125 ஆண்டுகளைக் கொண்டாடுகின்ற வேளையில் இறைவனுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின் போது இவ்வாலயம் மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பளித்து அபயமளித்த இடமாகவும் இருந்திருக்கிறது. இராணுவ நடவடிக்கைகளின்போது மக்கள் பாதுகாப்புத்தேடி இவ்வாலயத்தை ஓடி வந்து தஞ்சம் புகுந்திருந்த வேளைகளில் எல்லாம் அன்னை அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுத்திருக்கிறாள்.

தும்பளை புனித மரியாள் ஆலயத்தின் 125 ஆண்டு நிறைவில் பங்குத் தந்தையையும் பங்கு மக்களையும் சிறப்புற வாழ்த்தி இவ்வாலயத்தை ஆழ்ந்த விசுவாச வாழ்வின் வெளிப்பாட்டால் பேணிப் பாதுகாக்க இறையாசீர் வேண்டுகின்றோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். ஆயர்.



ஆலயத்தின் தோற்றம்

### பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி



300 ஆண்டுகள் பழமை வாய்ந்த தும்பளை மரியன்னை ஆலயம் கட்டப்பட்ட 125 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பருத்தித்துறைப் பங்கில் உள்ள புனித மரியன்னை ஆலய மக்களையும் அவர்களில் வெளிப்படும் கடவுளின் நம்பிக்கையையும், அன்பையும் மேலும் அன்னை மரியாள் மேல் வைத்திருக்கும் பக்தியையும் மனமார வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

இந்நிலைக்கு வளர அயராது உழைத்த முதாதையர்களைப் பாராட்டுகின்றேன். தொடர்ந்தும் ஆலய மக்கள், குடும்பங்கள் அன்பிய வாழ்வில் செழித்தோங்க வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

இருதயதாஸ்,
பங்குத்தந்தை பருத்தித்துறை.

**வாழ்க புனித மரியன்னை!**

*125 ஆவது ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பித்துக்கொள்ளும் வைபவங்கள்*
*08.12.2005 காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.*
*அவை பின்வருமாறு...*

01. யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட ஆயரை தும்பளை வீதியிலிருந்து ஆலயத்துக்கு அழைந்து வரல்.
02. புதிதாகக் கட்டப்பட்ட ஆலய மணிக்கோபுரத்தின் எழுத்துப்பலகையை யாழ். ஆயர் அவர்கள் திரைநீக்கம் செய்தல்.
03. கடந்த 45 ஆண்டுகளாக ஆயைச் செபமுதல்வராக பணியாற்றிய திரு. தொம்மைப்பிள்ளை மரியாம்பிள்ளை அவர்களைக் கௌரவித்தல்.
04. ஆலய பீடத்தில் எழுந்தருளியிருக்கும் மாதாவின் படம் வெளியிடல்.

## தும்பளை புனித மரியன்னை ஆலயத்தின் வரலாற்றுச்சுருக் ம்

*இன்று (08.12.2005) வியாழக்கிழமை தும்பளை புனித மரியன்னை ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா அவ்வாலயத்தில் நடை பெறுகின்றது.*

*தும்பளை புனித மரியன்னை ஆலயமானது பருத்தித்துறை நகருக்குக் கிழக்கே ஏறக்குறைய ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வாலயம் பருத்தித்துறை மறைப் பங்குத் தளத்தில் அமைந்துள்ள ஏனைய ஆலயங்களுள் மிகப்பழைமை வாய்ந்தது. தும்பளைப் பதியில் வாழ்ந்த மக்களுள் சிலர் 18ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே கத்தோலிக்க மறையைத் தழுவினர். ஒல்லாந்தரின் ஆட்சிக்கு முன்னரே (1658இற்கு முன்) இங்கு "நற்பிரயாண மாதா" ஆலயம் இருந்ததாகக்கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து 'மாதா' சுரூபம் ஒன்று தற்போது தும்பளை யிலுள்ள லூர்து கெபி வளவில், அமலோற்பவியின் நாமத்தினாலே கொட்டிலில் வைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்ததற்கு போதியளவு ஆதாரம் உண்டு. படிப்படியாக இப்பகுதியில் கத்தோலிக்க மறையானது பரவி, வளர்ச்சி அடையத் தொடங்கியது.*

*19 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க மறையைச் சார்ந்த மக்கள் தம் வழிபாட்டிற்குரிய கொட்டிலாக அமைந்த மாதா ஆலயத்தை கட்டடக் கோயிலாக கட்ட அவர்களுக்குத் தேவை ஏற்பட்டது. எனவே தான் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்த அமலமரித் தியாகிகள் (Oblate of Mary Immaculate) என்ற துறவறச் சபையைச் சார்ந்த குருக்கள் கத்தோலிக்க ஆலயங்களைக் கற்களினாலும் சுண்ணச்சாந்தினாலும் கட்டுவிக்கும் பணியை மேற்கொண்டனர். அத்தகைய பின்னணியிலேயே தும்பளை புனித மரியன்னை ஆலயமும் கட்டடமாகக் கட்டப்படலாயிற்று. முதலில் கொட்டிலாக கட்டியிருந்த ஆலய வளவு மிகவும் பள்ளநிலமாகையால் அங்கு மாரிகாலத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதுண்டு. எனவே புதிய ஆலயத்தினை முன்பு கொட்டிலாக இருந்த ஆலயத்திற்கு தெற்கே உள்ள உயர் நிலத்தில் கட்டத்திட்டமிட்டனர். அதன்படி புதிய ஆலயத்திற்கு 1880 ஆம் ஆண்டில் காலஞ்சென்ற அருட் பணி '**மௌரியர்**' (Oblate of Mary Immaculate) என்பவர் அடிக்கல் நாட்டினார். இவ்வாலயத்தினை கட்டுவிப்பதற்கு மறைந்த அருட்பணி **மாங்கோத்** (Oblate of Mary Immaculate) எம் மூதாதையரோடு அயராது உழைத்து இவ்வாலயம் 1900 ஆம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்டது என சுவாமி ஞானப்பிரகாசர் தன் நூலில் குறிப்பிடுகிறார்.*

*தற்போது இவ்வாலயம் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. தும்பளை வாழ் இறைமக்கள் உட்பட பருத்தித்துறைப் பங்கிலுள்ள கத்தோலிக்க மக்கள் யாவரும் 125 ஆவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுகின்றனர்.*

*துன்ப துயரங்கள், இன்னல்கள், இடைஞ்சல்கள், போர் அனர்த்தங்கள், இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும் போதெல்லாம் புனித மரியன்னை (மாதா) தன் வல்லமையினால் ஆபத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு ஆறுதல் அளித்து வருகிறாள். இதற்குச் சான்றாக தும்பளைப் பகுதியில் அண்மைக்காலங்களில் நடந்த சில சம்பவங்களைக் குறிப்பிடலாம். 1987 ஆம் ஆண்டில் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட அராஜக இராணுவ நடவடிக்கையின்போது மக்கள் பீதி அடைந்து இடம்பெயரலாயினர். பருத்தித்துறைக்குக் கிழக்கே வாழ்ந்த அநேக குடும்பங்கள், விடு வாசல்களை விட்டு வெளியேறி இவ்வாலயத்திற்கு ஓடி வந்து தஞ்சம் புகுந்தனர். பயங்கர சூழ்நிலையில் இவ்வாலயத்தில் தஞ்சம் புகுந்த மக்களுக்கு (இந்துக்கள் உட்பட) எதுவித ஆபத்தும் ஏற்படவில்லை. ஏனைய இடங்களில் தஞ்சம் புகுந்தோரில் சிலர் கைது செய்யப்பட்டனர்; இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டனர்; இராணுவமுகாம்களுக்கு கூட்டிச்செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். ஆனால் இவ்வாலயத்தில் தஞ்சமடைந்தோருக்கு எதுவித உயிராபத்தும் ஏற்படவில்லை; கைது செய்யப்படவுமில்லை. இது 'மாதா' வின் புதுமையாகக் கொள்ள இடமுண்டு. இது வரலாற்றிலே பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.*

*இதுபோன்று 2000 ஆம் ஆண்டில் தென்மராட்சியிலும், வடமராட்சி கிழக்கிலும் ஏற்பட்ட பயங்கரப் போர்காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இவ்வாலயத்திலேயே தஞ்சம் அடைந்தனர். தஞ்சம் அடைந்தோர் கத்தோலிக்கர் மட்டுமல்ல, இந்துக்களும் ஆவர். இங்கு இடம்பெயர்ந்து வந்த குடும்பங்கள் இவ்வாலயத்தில் பல மாதங்களாக தங்கியிருந்தனர். இச்சம்பவமும் "மாதா" ஆபத்தில் சிக்கியவர்களுக்கு ஆறுதலும் அபயமும் அளிக்கிறாள் என்பதற்கு சான்றல்லவா?*

*2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதியன்று ஏற்பட்ட இராட்சத ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தும்பளைக் கடற்கரை வாழ் மக்கள் தங்கள் உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு உடைமைகளை இழந்து ஓடோடி வந்து இவ்வாலயத்தில் தஞ்சம் புகுந்து அகதிகளாயினர். 'மாதா' அடைக்கலம் தேடி ஓடி வந்தவர்களுக்கு அபயமும் அடைக்கலமும் அளிக்கிறாள் என்பதற்கு இதுவும் சான்றல்லவா. இன்னமும் இவ்வாலயத்தில் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட அகதிகள் அவ்வாலயத்தைச்சுற்றியுள்ள காணிகளில் முகாம்களில், தற்காலிகக் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.*

*இச்சம்பவங்கள் மூலம் இவ்வாலயம் சிறப்புப் பெறுவதோடு புனித மரியன்னை அற்புதச் செயல்களினால் அவள் போற்றிப் புகழப்படுகிறாள்.*

ஆக்கம்:
திரு. சீமாம்பிள்ளை அந்தோனிமுத்து
(முன்னாள் விரிவுரையாளர், புனித மரியன்னை ஆலயப் பணிச்சபைச் செயலர்).

# ஜனாதிபதியின் ஒற்றையாட்சி ஆட்சிக் கடும்போக்கே படையினருக்கு எதிரான தாக்குதலுக்குக் காரணம்

## புதிய இடதுசாரி முன்னணி அறிக்கை

ஜனாதிபதித் தேர்தல் மூலம் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் முற்றிலும் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. ஒற்றையாட்சியை உறுதிப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுள்ள கடும்போக்கே வடக்கில் ஆயுதப்படையினருக்கு எதிராகத் தமிழ்மக்கள் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்குக் காரணமாகும்.

- இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இனவாதத்தை, யுத்தத்தை விரும்பும் பேரினவாத சக்திகளின் ஜனாதிபதியொருவராகப் பதவியேற்றால் இவ்வாறான நிலைப்பாட்டை எதிர்கொள்ளவேண்டி வரலாமென நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம்.

எதிர்காலத்தில் உருவாகக் கூடிய அரசியல் கொந்தளிப்புப் பற்றி எண்ணிப்பார்க்காது ஜனாதிபதியாக வரும் ஒரே நோக்கை முன்வைத்து ஒவ்வாத கொள்கைகளைக் கொண்ட யுத்த விரும்பிகளின் கைப்பொம்மையாகச் செயற்படும் மஹிந்த ராஜபக்ஷ இச்சம்பவங்கள் தொடர்பாக இந்நாட்டிலுள்ள மக்களுக்குப் பதிலளிக்கவேண்டும்.

சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல உறுதி வழங்கியுள்ள அவர் தொழிலாளர் வர்க்கத்தையும் இடதுசாரிகளையும் அரசியலிலிருந்து ஓரம்கட்ட முயற்சிசெய்கிறார்.

மறுபுறத்தில் இத்தாக்குதல்கள் வாயிலாக சிங்கள முதலாளித்துவ தலைமைகளோடு கைகோர்த்து தமிழ்மக்களது குடியிருப்புகளையும் விளை நிலங்களையும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமித்து வைத்திருப்பதை விடுவிக்கும் நோக்கம் இல்லையென்று புலனாகின்றது.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரித்து, உயர்பாதுகாப்பு வலயத்தை விடுவிப்பதற்குப் பதிலாக அவற்றிற்கு வாடகை செலுத்துவதற்குப் புதிய ஜனாதிபதி ஆயத்தமாகியுள்ளார். அவரது வெற்றியோடு உருவாகியுள்ள யுத்தநிலைப்பாட்டைக் கொண்டுள்ள அரசியல் கொள்கைகளின் பிரதிபலனாகத் தமிழர்களது உரிமைப்போராட்டம் கெரில்லாத் தாக்குதல்களோடு முன்னெடுத்துச் செல்லப்படுவது நிச்சயமே.

இப்போராட்டம் புதிய அணுகுமுறையொன்றே என்று கருதுவதில் தவறில்லை. ஆயினும், மஹிந்த ராஜபக்ஷவிடம் இப்போராட்டம் தொடர்பாக முன்வைக்கும் அரசியல் தீர்வொன்று இருப்பதாகத் தெரியவில்லை.

அதற்குப் பதிலாக அதற்கு எதிரான சகல சக்திகளோடும் இணைந்து, ஹெலஉறுமய அமைப்பின் கொட்டகதெனியவின் திட்டத்தையே அவர் பின்பற்றுவதாகத் தெரிகிறது. தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்குவதாக இது தென்பட்டபோதும், அதன் அடுத்த கட்டம் முதலாளித்துவ - உலக மயமாக்கலுக்கு எதிரான - தெற்கின் தொழிலாளர் வர்க்கத்தின் முதுகெலும்பை உடைக்கும் நடைமுறைகளாக நிச்சயமாக மாறும் என்பதை நாம் உறுதியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மஹிந்த ராஜபக்ஷ தனது நிர்வாகத்தால் இனவாதக் குழுக்களை இணைத்துக்கொண்டு நகர்ப்புறத் தொழிலாளர் வர்க்கத்தை நசுக்க முயல்வது சாத்தியப்படாது. ஏனெனில், நகர்ப்புறத் தொழிலாளர் வர்க்கமும் பாதிக்கப்பட்டோரும் சமாதானத்தை விரும்பி எழுச்சியோடு கைகோர்த்துள்ளனர்.

தொழிலாளர் வர்க்கம் உள்ளிட்ட ஜனநாயகத்தை விரும்பும் - சமாதானத்தை விரும்பும் சகல மக்களும் அரசினால் முன்னெடுத்துச் செல்லப்படும் இனவாத யுத்த விருப்புச் செயற்பாடுகளுக்கு முகங்கொடுத்துப் போராட உத்வேகத்துடன் செயற்பட ஒன்றிணையுமாறு நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தமிழர்களது உரிமைப் போராட்டத்தை உலக மயமாக்கல் மூலம் அடிமைப்படுத்த முன்னெடுக்கப்படும் சதித்திட்டத்துக்கு எதிராக எழுச்சியுடன் போராடும் இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தோடு இணைந்து ஐக்கியமான தீர்வொன்றைக் காண முன்வருமாறு தமிழர் விடுதலைக்காகப் போராடுவோரைக் கோருகிறோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-206)

## 25 கிராமங்களில் 'நியாப்' திட்ட அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான நியாப் II திட்டத்தின் கீழ் 25 கிராமங்கள்அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் வீதிகள் மற்றும் கிணறுகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட வீதிகள், கிணறுகளின் விவரம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமமட்டத்தில் பெறப்படும் அறிக்கைகளையும் மதிப்பீட்டு அறிக்கைகளையும் யாழ். நியாப் முகாமைத்துவ பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறு நியாப் பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன் கேட்டுள்ளார். (ஒ-185)

## ஒன்றுகூடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

'ஜீ.ரி.இசற்.' நிறுவனத்தால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உளவளத்துணையாளராகப் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்தப்படவிருந்த ஒன்றுகூடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி யாழ். சாந்தியக நிலையத்தில் நடைபெறவிருந்த உளவளத் துணை இணைப்பாளர்களுக்கான மாதாந்த கலந்துரையாடலும் பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகள் நடைபெறும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று 'ஜீ.ரி. இசற்.' நிறுவன நிர்வாக அலுவலர் எஸ்.கே. சதாசிவம் தெரிவித்துள்ளார். (த-204)

## கல்வியியல் டிப்ளோமா அனுமதிப் பரீட்சை

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியல் முதுமாணி மற்றும் கல்வியியல் பட் டப்பின் டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகளுக்கான அனுமதிப் பரீட்சைகள் முறையே எதிர்வரும் 11ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ஐ-202)

## பிரிட்டிஷ் அமைச்சர் இலங்கை வருகிறார்

பிரிட்டிஷ் அமைச்சர் தெஸா ஜோவெல் அம்மையார் ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார். இந்த விஜயத்தின்போது தெஸா அம்மையார் இந்தியா, தாய்லாந்து நாடுகளுக்கும் செல்ல இருக்கிறார். இவர் பிரிட்டிஷ் அமைச்சரவையில் கலாசாரம், ஊடகம், விளையாட்டுத் துறைகளுக்குப் பொறுப்பாக இருக்கிறார்.

இவர் இலங்கையில் புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவி ஏற்றதன்பின் இலங்கைக்கு விஜயஞ்செய்யும் முதல் பிரிட்டிஷ் அமைச்சராவார்

இலங்கையில் இருக்கும்போது ஆழிப்பேரலைப் பாதிப்புப் பகுதிகளில் இடம்பெறும் பிரிட்டிஷ் ஆதரவிலான கட்டட நிர்மாணப் பகுதிகளுக்கும் அமைச்சர் விஜயம் செய்வார். புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார். இங்கு இடம்பெற்றுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் பற்றி அமைச்சர் நாடு திரும்பியதன் பின்னர் பிரதம மந்திரி ரொனி பிளேயருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்.

இத்தகவல்களை கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ப)

## நவாலிப் பகுதியில் மயானங்களுக்கு கொட்டகை அமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

நவாலிவடக்கு சனசமூக நிலையத்தினரால் இரண்டு மயான கொட்டகைகள் நவாலியில் அமைக்கப்பட்டுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்டவரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இக்கொட்டகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நவாலி வடக்குப் பகுதியிலுள்ள நவாலி ஆரியம்பிட்டி இந்துமயானத்திலும் நவாலி தெற்குப் பகுதியிலுள்ள கொத்துக்கட்டிப் பகுதியிலும் மயான கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 50ஆண்டுகளுக்கு மேலாக நிறைவேற்றப்படாது இருந்த இந்தத்தேவை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

விரைவில் மயானப் பகுதியில் உள்ள பற்றைகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-185)

# கிழக்கில் முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு கருணா குழுவே பின்னணியில் என்பது அம்பலம்!

## புலிகளிடம் சிக்கிய இருவர் உண்மையை ஒப்புக்கொள்கின்றனர்

கொழும்பு,டிசெ.8

கிழக்கில் முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க்குழு ஒன்றே பொறுப்பு என்பது அம்பலமாகியிருக்கின்றது.

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய நிலையில் புலிகளிடம் சிக்கிய - மேற்படி குழுவைச் சேர்ந்த - இருவர், அம்பாறையில் அண்மைக்காலத்தில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குத் தாங்களே காரணம் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

கஞ்சிகுடிச்சாறு பகுதியில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - ஊடுருவித் தாக்குதல் நடத்த முயன்ற ஸ்ரீ லங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவைச்சேர்ந்த 4 பேரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கிச் சுட்டுக்கொன்றனர்.

இந்தத் தாக்குதலின்போது ஞானதீபன், புகழ்வேந்தன் என்ற மேற்படி கருணா குழுவைச்சேர்ந்த இருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தயாமோகன் மேலும் கூறியுள்ளதாவது:-

அம்பாறை பிரதேசத்தில் அண்மையில் முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு இனிய பாரதிதான் காரணமாக இருந்துள்ளார் என்று சரணடைந்த இருவரும் தெரிவித்துள்ளனர். கஞ்சிகுடிச்சாறு தாக்குதலில் இனியபாரதி கொல்லப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பள்ளிவாசல் மீதான தாக்குதலையும் இந்தக் குழுவினரே மேற்கொண்டனர் என்று சரணடைந்த இருவரும் கூறியுள்ளனர். அம்பாறையில் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமான பன்னலகமவிலுள்ள ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து இந்த ஆயுதக்குழுவினர் இயங்கிவந்துள்ளனர் எனவும் அவர்கள் மேலும் கூறினர் - என்றார் தயாமோகன்.

சரணடைந்த ஞானதீபனும் புகழ்வேந்தனும் விரைவில் ஊடகவியலளார்களைச் சந்தித்து உண்மைகளை விளக்குவார்கள் என்றும் தயாமோகன் கூறினார். (க-3)

# அமைதி முயற்சிகள் தொடர்பாக ஜே.வி.பியுடன் ஜனாதிபதி பேச்சு

கொழும்பு, டிசெ.8

விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஜே.வி.பியினரைச் சந்தித்து விரிவான பேச்சுகளை நடத்தியிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் சுமார் மூன்று மணி நேரம் இந்தப் பேச்சு இடம்பெற்றது. அரசின் சார்பில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் , ஜே.வி.பியின் சார்பில் அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, விஜித ஹேரத் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பது குறித்தும் அதன் உடனடி அவசியம் குறித்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியினருக்கு எடுத்துரைத்தாரெனவும் அமைதி முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஜே.வி.பி. இணக்கம் தெரிவித்ததாகவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்றுமுன்தினம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவுடன் ஏற்கனவே பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் அனைத்துக் கட்சிகளுடனும் ஜனாதிபதி இதுபற்றிப் பேசவுள்ளாரென்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் நடைபெற்ற சந்திப்பின்போது வடக்கு - கிழக்கில் படையினருக்கு எதிராக இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஜே.வி.பி. கடுமையான எதிர்ப்பை ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக அறியவருகிறது. இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜே.வி.பி. ஜனாதிபதியிடம் வேண்டுகோளொன்றையும் விடுத்ததாகக் கூறப்பட்டது. (க-3)

## சாயி சிந்தனை

### எல்லாமே இறைவன் செயல்



*பக்தி மார்க்கத்தில் செல்லும் போது கூட மனிதருக்குச் சுயநலமே மேலோங்கியிருக்கிறதே தவிர கடவுளின் கட்டளைப்படி நடக்க முயல்வதில்லை. அப்படியிருக்க எதற்காக கட்டளை இடுவது? ஏன் உன்னை பக்தன் எனச்சொல்லிக் கொள்கிறாய்? கட்டளைப்படி நடக்கவில்லையெனில், அதை ஏன் பக்தி என அழைக்கின்றாய்? ஒவ்வொன்றையும், இறைவனின் கட்டளைப்படி அனுசரித்து நடக்கவேண்டும். அதுவே உண்மையான வழி.*

*புரந்தரதாஸர் 'ஓ' இறைவா! உன்னை மறந்தால்தான் நான் இவ்வுலகில் பிறவி எடுத்திருக்கின்றேன்! உன்னை மட்டும் என் இதயத்தில் பிரதிஷ்டை செய்திருப்பின் எனக்குப் பிறவியே இருந்திருக்காது! என்று சொன்னார்.*

*எல்லாவித சந்தேகங்களுக்கும் ஒரே விடை! தேகத்தின் மேல் பற்று இருக்கும் வரை சந்தேகம் என்பது போகவேபோகாது! ஒருமுறை யோசித்து உன்னையே கேட்டுக்கொள்! மலையின் உச்சியில் ஒரு மரம் வளர்வதைக் காண்கின்றாய்! அதற்குக் கட்டடம் கட்டி, எரு போட்டு, நீருற்றி வளர்த்தவர் யார்? மயிலுக்கு இத்தனை வர்ணத்தைத் தீட்டியவர் யார்? எவ்வளவு பெரிய ஓவியனானாலும் இயற்கையின் வண்ணங்களை அப்படியே கொண்டுவரமுடியுமா? இறைவா நீ எத்தனை பெரிய கலைஞன்? தெய்வீகக் கலைஞன்! பச்சையான கிளியின் மூக்குக்கு எத்தனை சிவந்த வண்ணம் இதைச் செய்தவர் யார்? எந்த விஞ்ஞானி இதைத் தீர்மானிக்கமுடியும்? அவர்கள் இதை இயற்கையான விஷயம் என்று கருதுகிறார்கள். இல்லை! எது நிகழ்ந்தாலும், அது தெய்வ சங்கற்பத்தினாலேயே நிகழ்கிறது. அவரது விருப்பம் இன்றி இவ்வுலகில் எதுவும் நடப்பதில்லை.*

*ஆனால் மனிதர்கள் தங்களைச் சாதாரணமான இழிந்த பிறவிகள் எனக் கருதுகின்றார்கள். அது தவறு! இதற்காகத்தான் புரந்தரதாஸர் சொல்கிறார் இறைவா நீ இருக்கும்போது நான் எவ்வாறு ஏழையாக இருக்க முடியும்? நீ தானே எல்லாவற்றையும் நடத்துகின்றாய்? நீயே ஆசிரியன்! நீயே அனைவரையும் காப்பாற்றுகின்றாய்? நீயே என்னைத் திருத்துகின்றாய்! நீயே என்னைத் தண்டிக்கவும் செய்கிறாய்! அப்படியென்றால் உனக்கு என் மேல் அத்தனை உரிமை இருக்கிறது என அர்த்தம். அவ்வாறிருக்கும் போது நான் எப்படி ஏழையாக முடியும்? நான் நீயாக இருக்கும் போது உனக்கு என் மேல்தான் எத்தனை உரிமை? ஆகவே, அனைவருமே தெய்வத்தின் அம்சங்களே.*

*[ஆதாரம்: ப்ரசாந்தியில் அமிர்தவர்ஷனி I ]*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி
கோவில்குடியிருப்பைச் சேர்ந்த

## மரிய அருளானந்தம் மரியபேணாட்

அவர்கள் சாவகச்சேரி மாவட்ட நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவிப் பிரமாணம் செய்ததையிட்டு அவரின் சேவைகள் தொடர மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோவில்குடியிருப்பு மக்கள்.

(ச/46660)(42-14-19)

# கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில்
பிரதம பொறியியலாளராகச்
சேவை ஆற்றி ஒய்வுபெற்ற
எந்திரி

## கிருஷ்ணபிள்ளை துரைராஜா

அவர்களின் திடீர்
மறைவையிட்டு எமது இதய
அஞ்சலியைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரது குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதம பொறியியலாளர்,
நிறைவேற்றுப் பொறியியலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்.
யாழ்ப்பாணம்.

(ச/46661)(42-14-19)

# 3ஆம் ஆண்டு நினைவு நாள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26 - 04 - 1973 | 08 - 12 - 2002 |



## அமரர் கனகரத்தினம் கணேசகுமார்

மூன்றாண்டு சென்றதையா கணேசா!
அரவணைத்த கை தவிக்குதையா கணேசா!
நிஜமாக எம் முன் வா கணேசா!
நிழலாக வராதே கணேசா!

பொன்னம்மன் உரவாணிபம்,
உடையார்கட்டு.

(ச.46666)(42-14-19)

தாய், தந்தை, சகோதரர்கள்,
உறவினர்கள்.

# ஹற்றன் நஷனல் வங்கி - யாழ்ப்பாணம்

## அடகுப் பொருள்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்

**எமது கிளையில் அடகுசேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்துக்கு!**

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்திக் கடனின் காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஒருவருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப்பொருள்களை மீட்க/காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப்பொருள்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

ஏலத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- முகாமையாளர்.

(ச/46659)(42-14-19)

# சைவத்திருமுறை விழா

நவாலி, டிசெ.8

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்க சைவத் திருமுறை விழாவும் சைவ சமய செயற்பாட்டு பரிசளிப்பு வைபவமும் நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஆனைக்கோட்டை காசி காண்டமட சிவன் ஆலயத்தில் காலை 8.30 மணி முதல் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து ஆசியுரையை காசி காண்டமட தேவஸ்தான குரு சிவஸ்ரீ சோ.கௌரியாலக்குருக்களும் வாழ்த்துரையை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் அ.சதானந்தன், இளைப்பாறிய ஆசிரியர் க.கதிரேசு ஆகியோரும் வரவேற்புரையை இந்து சமய விருத்திச் சங்க பொருளாளர்இ.சரவணபவனும் சிறப்புரைகளை ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், இளைப்பாறிய அதிபர் சைவப் புலவர் க.செல்லத்துரை ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

இறுதியில் மாணவர் நிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும். (த-100)

## புலமைப்பரிசில் மாணவர்களுக்குப் பாராட்டு

மானிப்பாய்,டிசெ.8

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் ஆண்டு ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மானிப்பாய் லயன்ஸ் கழகம் நடத்தும் பாராட்டு வைபவம் இன்று வியாழக்கிழமை பி.ப 4மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகவும் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.தனபாலசிங்கம்,லயன் எஸ்.லோகசிங்கம், லயன் டாக்டர் செல்வி நவமலர் கனக ரட்ணம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கழகத் தலைவர் லயன் எஸ்.ஸ்ரீநிவாசன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும். (த-90)

## 40 வருடங்களாக புனரமைக்கப்படாத வீதிகள்

மானிப்பாய்,டிசெ.8

மானிப்பாய் வடக்கிலுள்ள இராசகாரியார் வீதியும் அதனுடன் தொடர்புடைய உச்சியோடை வீதிகளும் புனரமைப் ச் செய்யப்படவில்லை.

சுமார் 40 வருட காலமாக இந்த வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவில்லையென மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகாரசபை மானிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளருக்கு முறைப்பாடு செய்துள்ளது. (த-90)

## திருவெம்பாவை உற்சவங்கள்

நல்லூர்,டிசெ.8

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோவில் திருவெம்பாவை உற்சவ விழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

பத்தாவது தினமான எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஆருத்திரா தரிசனம் இடம்பெறும். (த-111)

* * *

நல்லூர்,டிசெ.8

மண்டைதீவு அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் தேவஸ்தானத்தின் திருவெம்பாவை உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

உற்சவத்தின் இறுதி நாளன்று மண்டைதீவு மகாவித்தியாலய அதிபர் எஸ். கனகரத்தினம் சிறப்புப் பாமாலை நூலை வெளியிட்டுவைப்பார். (த-111)

## இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணவிநியோகம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண உலர் உணவுப் பொருள்கள் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களுக்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்களே வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-117)

# அறிவித்தல்

வலிகாமம் தெற்கு,-பிரதேசசபை, சுன்னாகம்
வரவு - செலவுத் திட்டம் - 2006

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க 171(ஏ) பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2006ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் சுன்னாகம், உடுவில், ஏழாலை அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். இது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிப்போர் 13.12.2005 ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் தெற்கு பிரதேசசபைச் செயலாளருக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர், வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(ச/46689)(42-14-19)

# 31ஆம் நினைவு நாள்



## சேனாதிராசா ரிலக்ஷன்

| மலர்ந்தது | உதிர்ந்தது |
|---|---|
| 20-01-1998 | 08-11-2005 |

துடிப்புடனே துள்ளித்திரிந்தாய்
படிப்பினிலே பகலவன் ஆவாய் - என
பாங்குடனே எதிர்பார்த்திருந்தோம்
அரும்பிய மலரது மொட்டவிழமுன்னே
கருகவைத்த காலனுக்கு கருணையே
இல்லையடா!
என்றும் உன் நினைவோடு......

10ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (43740)(42-14-19)

- குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02 - 07 - 1927 | 08 - 12 - 2003 |



## தியோ சின்னப்பு செபமாலையம்மா

தம்பதியினர்

**உயிர்ப்பும் உயிரும் நானே**
**என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்.**

ஊறணி,
காங்கேசன்துறை. (40/07)(42-14-19)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25 - 05 - 1984 | 19 - 11 - 2004 |



## அமரர் சடாசிவம் குமரன்

கல்லூரியின் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தவர். பண்பும் பணிவும் கடமை உணர்ச்சியும் கொண்ட மாணவனாக வாழ்ந்தவர். சிறந்த காற்பந்தாட்ட வீரனாகவும் கல்லூரியின் காற்பந்தாட்டக் குழுவில் அங்கம் வகித்தவர். அவரின் ஆத்மா சாந்தியடைய ஓராண்டு நிறைவில் இறைவனை கல்லூரி சமூகத்தின் சார்பில் வேண்டி வணங்குகின்றேன்.

செ.யோகச்சந்திரன்
(இளைப்பாறிய அதிபர்,
சிதம்பரக் கல்லூரி).

ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை. (43714)(42-14-19)

# துயர் பகிர்கின்றோம்



## திருமதி அகிலாண்டம் மகாலிங்கம்

(முன்னாள் ஆசிரியை, யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

கடந்த 08.11.2005 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த திருமதி அகிலாண்டம் மகாலிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(43722)(42-14-19)

## இந்திய அமைச்சர் நட்வர் சிங் பதவியை ராஜினாமா செய்தார்

இந்திய மத்திய அமைச்சர் நட்வர் சிங் நேற்றுமுன்தினம் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

''ஈராக்கில் எண்ணெய்க்குப் பதில் உணவுத் திட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஊழலில் எனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. எந்த முறைகேடுகளிலும் நான் ஈடுபடவில்லை. ஆனாலும், நாடாளுமன்றம் செயல்படாமல் முடக்கப்படுவதற்கு நான் காரணமாக அமைந்துவிடக் கூடாது என்பதால் அமைச்சர் பதவியிலிருந்து விலகுகிறேன்.'' எனக் கூறினார் நட்வர் சிங். சில நாள்களாக இந்த விவகாரத்தால் இந்திய நாடாளுமன்றம் எதிர்க்கட்சிகளால் முடக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

உலக அரங்கில்

# ஈராக்கில் தற்கொலைத்தாக்குதல்கள் 50 பேர் உயிரிழந்தனர்; 100 பேர் காயம்



பாக்தாத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினர்.

பாக்தாத்,டிசெ.8

ஈராக் தலைநகர் பாக்தாக்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது 50பேர் உயிரிழந்தனர். மேலும், 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்தையடுத்து அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. காயமடைந்தவர்கள் உடனடியாக பாக்தாத்தில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

தலைநகர் பாக்தாத்தில் உள்ள பொலீஸ் பயிற்சிக்கல்லூரியில் புதிதாகச் சேர்ந்துள்ளவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்த வகுப்பு ஒன்றினுள் இரண்டு பெண் தற்கொலைக் குண்டுதாரிகள் நுழைந்தனர். அவர்கள் அங்கு தமது உடலில் கட்டியிருந்த குண்டுகளை அடுத்தடுத்து வெடிக்க வைத்தனர். இந்த அனர்த்தத்தில் பொலீஸ் அதிகாரிகள் உட்பட 50 பேர்வரை உயிரிழந்தனர்; 100 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் அமெரிக்கப்படையினர் எவருக்கும் எந்தவித இழப்புகளும் ஏற்படவில்லையென அமெரிக்கப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனினும், சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு அமெரிக்கப்படையினர் விரைந்தனர். உடனடியாக அந்தப்பகுதி தடை செய்யப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# பெண்கள் கற்புடன் இருக்கவேண்டும் எனக் கூறும் சதாமின் ஆட்சியிலேயே கொடுமைப்படுத்தப்பட்டோம்

## ஈராக் நீதிமன்றில் பெண் சாட்சி கதறல்



நீதிமன்றத்தில் சதாம் ஹுசைன்

பாக்தாத்,டிசெ.8

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணைகளின்போது நேற்றுமுன்தினம் அரச தரப்பு இரண்டு பெண் சாட்சிகள்விசாரிக்கப்பட்டனர். அவர்கள் மிகவும் கதறிஅழுது தமக்கு நேர்ந்த கொடுமைகள் பற்றி விபரித்தனர். அவர்களில் ஒரு பெண் கதறி அழுதவாறு, பெண்கள் கற்புடன் இருக்க வேண்டுமென சதாம் கூறுவார். ஆனால், அவரது ஆட்சியிலேயேதான் நாம் கற்பளிக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டோம் எனத் தெரிவித்தார்.

ஈராக்கில் 1982 ஆம் ஆண்டு துஜெயில் கிராமத்தில் ஷியா பிரிவு மக்கள் 137 பேர் கொல்லப்பட்டனர். இந்தப்படுகொலை வழக்கு தற்போது ஈராக் நீதிமன்றில் நடந்துவருகிறது. சதாம் மற்றும் ஏழுபேர் மீதும் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. கடந்த திங்களன்று ஆண்கள் இரண்டுபேர் சாட்சியமளித்தனர். நேற்றுமுன்தினம் இரண்டு பெண்கள் சாட்சியமளித்தனர்.

நீதிமன்றுக்கு வழக்கம்போல கடைசி ஆளாக நேற்றுமுன்தினம் வந்த சதாம் ஹுசைன்குர்-ஆனுடன் சில ஆவணங்கள் மற்றும் காகிதங்களைக்கொண்டுவந்தார். சாட்சியம் அளிக்கப்பட்டபோது குறிப்பு எடுத்துக்கொண்டார். நீதிமன்றுக்குள் நுழைந்தவுடன் பழைய மிடுக்குடன் 'சட்டத்தை நம்பும் அனைவருக்கும் காலை வணக்கங்கள்' என்று கூறியபடி தனக்குரிய நாற்காலியில் கம்பீரத்துடன் அமர்ந்தார். ஆனால், பெண்கள் சாட்சியமளிக்கத்தொடங்கியதும் அவரது முகம் பாறைபோல் இறுகியது. இடையிடையே எதிர்ப்பும் தெரிவித்தார். ஆனால், நீதிபதி அதை ஏற்றுக்கொள்ளவில்லை . நேற்றுமுன்தினம் சதாமுக்கு எதிராக இரண்டு பெண்கள் சாட்சியம் அளித்தனர். பெண்கள் சாட்சியம் அளிக்கும் முன் பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சாட்சி அளிக்க வந்த பெண்கள் சுற்றிலும் திரையிடப்பட்ட பகுதியில் அமரவைக்கப்பட்டனர். அவர்கள் பேசுவது நீதிபதி, சட்டத்தரணிகள், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தவிர வேறுயாரும் கேட்கமுடியாத அளவிற்குச் செய்யப்பட்டது. பெண்களின் பெயர்கள் கூறப்படவில்லை. 'சாட்சி ஏ, சாட்சி பி' என்றே அழைக்கப்பட்டனர்.

சாட்சியான இரு பெண்களும் 1981 ஆம் ஆண்டு நடந்த சம்பவங்களை நினைவு கூர்ந்தனர். முன்னதாக 'சாட்சி ஏ' என்ற பெண் சாட்சி அளித்த போதே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அந்தப் பெண் கூறியதாவது:-

துஜெயிலைச் சேர்ந்த என்னை சதாம் ஆதரவு இராணுவத்தினர் கைதுசெய்தபோது எனக்கு வயது 16 இருக்கும். எங்கள் வீட்டுக்குவந்த அவர்கள் வலுக்கட்டாயமாக என்னை நிர்வாணப்படுத்தினர். நான் கெஞ்சினேன், கதறினேன். என் கால்களை உயர்த்தி கைகளுடன் கட்டினர். பின்னர் பெரிய விருந்தில் பங்கேற்பதுபோல என்னை சீரழித்தனர். (இந்தப் பெண் குற்றம் சாட்டிய ராணுவ அதிகாரி பெயர் வதாக் அல் - செயீக். ஈரான் உளவுத்துறையில் பணியாற்றியவர். புற்று நோயால் கடந்த மாதம் இறந்துவிட்டார்.) எதிர்ப்புத் தெரிவித்த என்னை அடித்து உதைத்தனர். துப்பாக்கியால் குத்தினர், மின்சார அதிர்ச்சி கொடுத்தனர். (சாட்சி அளிக்கும்போது திரைக்குப்பின்னால் இருந்து அழும் குரல் கேட்டது. அடிக்கடி 'இறைவன் மிகப் பெரியவன்', 'இறைவா' என்ற குரல் ஒலித்துக்கொண்டே இருந்தது.)

பெண்கள் கற்புடன் இருக்கவேண்டும் எனச் சதாம் கூறுவார். அவரது ஆட்சியில் தான் இத்தனை கொடுமைகள் நடந்தன. இவ்வாறு அந்தப்பெண் கதறியழுதவாறு சாட்சியம் அளித்தார்.

சாட்சிகளிடம் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சதாம் ஹுசைன் அடிக்கடி குறுக்கிட்டார். உங்களுக்கு என் தலைதான் வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள். நான் மரணதண்டனைக்குப் பயப்படவில்லை. அது ஈராக்கியர்களின் கால் செருப்புக்குச் சமம் - என ஆவேசத்துடன் தெரிவித்தார்.

சாட்சிகளைப் பார்த்து 'குறுக்கே பேசாதே தம்பி' என அதிகாரத்துடன் அவர் கூறினார்.

விசாரணையின்போது சதாம் தரப்பு தலைமை வழக்கறிஞர் கிளார்க் திடீரென எழுந்து நீதிபதிகளிடம் விசாரணையைப் பார்க்க வந்துள்ள ஒருவர் தம்மை மிரட்டும் பாணியில் சைகை செய்கிறார் எனத் தெரிவித்தார்.வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (க)

## ஆபிரிக்க நாடுகளில் நில நடுக்கம் 10 பேர் உயிரிழந்தனர்; 100 பேர் காயம்

ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் 100 பேர் காயம்; 10 உயிரிழந்தனர்; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பல கட்டடங்களும், வீடுகளும் இடிந்துவீழ்ந்து தரைமட்டமாகின.

ஆபிரிக்க நாடுகளான கென்யா, ஹொங்கோ, புருண்டி உட்பட பல நாடுகளில் நிலநடுக்கம் உணரப்பட்டது. இவற்றில் ஹொங்கோ குடியரசில் பாரியளவில் சேதம் ஏற்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர். முக்கிய நகரமான லேக்டாங்கன் உட்பட பல பகுதிகள் இதனால் பாதிப்புக்குள்ளாகின.

வீடுகள் பல இடிந்து வீழ்ந்தமையால் வீடுகளுக்குள் உறங்கிக்கொண்டிருந்த குழந்தைகள் உட்படப் பலர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.8 புள்ளியாகப் பதிவானது. ஹொங்கோ குடியரசு உள்நாட்டுப்போராலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் தாக்கம் கென்யா, ருவான்டா புருண்டி, தன்சானியா ஆகிய நாடுகளிலும் உணரப்பட்டது. அங்கு ஏற்பட்ட சேத விபரங்கள்பற்றி எதுவும் தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கனரக வாகனம்-பஸ் மோதல் சீனாவில் 25 பேர் உயிரிழப்பு'

சீனாவின் தலைநகர் பீஜீங்கில் இரசாயனப் பொருள்களுடன் சென்ற கனரக வாகனம் பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 25பேர் உயிரிழந்தனர். மேலும் 25 பேர்வரை படுகாயமடைந்தனர்.

பீஜிங் நகரத்தின் கிழக்குப் பகுதியில் கல்சியம் குளோரைட் என்ற இரசாயனப் பொருளை ஏற்றிக்கொண்டு சென்ற கனரக வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடத்தொடங்கியது. எதிரே வந்த பயணிகள் பஸ் ஒன்றுடன் பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது. இந்த அனர்த்தத்தில் அந்த இடத்திலேயே 25 பேர் உடலசிதறிப் பலியாகினர்.மேலும் 25 பேர் வரை படுகாயமடைந்தனர்.இவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

கனரக வாகனமும் பஸ்ஸும் மோதிய வேகத்தில் 20 மீற்றர் பள்ளத்தில் உருண்டு விழுந்தன. மீட்புப்பணிகளில் பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர். (க)

# விமான அனர்த்தம் தொடர்பாக ஈரான் அதிகாரிகள் விசாரணை



ஈரானில் நேற்றுமுன்தினம் விமானம் விழுந்து நொறுங்கிய 10 மாடிக் கட்டடத்தில் மீட்புப்பணிகள் நடைபெறுவதைக் காணலாம்.

தெஹ்ரான்,டிசெ.8

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்துக் குறித்து ஈரான் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, விமானம் மோதி விழுந்த 10 மாடிக் கட்டடப் பகுதியில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. நொருங்கிய விமானத்தின் பல பாகங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் நாட்டில் தென்கிழக்கு கடற்கரையோரச் செயல்பாடு குறித்து நேரில் பார்வையிட பத்திரிகைக்காரர்கள், புகைப்படக் கலைஞர்கள் அடங்கிய குழுவினர் இராணுவ விமானத்தில் புறப்பட்டனர். மெக்ராபாத் விமான நிலையத்திலிருந்து விமானம் புறப்பட்டுச் சென்றது.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து உடனடியாக மெக்ராபாத் விமான நிலையத்திற்கு விமானம் மீண்டும் திரும்பியது.

அப்போது கட்டுப்பாட்டை இழந்து விமானம் பறந்தது. தெஹ்ரான் நகரின் மீது பறந்தபோது அங்கிருந்த 10 அடுக்கு மாடிக் கட்டடம் மேல் விமானம் மோதியது. விமான என்ஜின் பெட்ரோல் நிரம்பி இருந்ததால் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 94 பேரும், அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசித்துவந்த 36 பேரையும் சேர்த்து மொத்தம் 130 பேர் பலியானார்கள். 100 பேர் காயமடைந்தனர். அடுக்கு மாடிக் குடியிருப்பில் பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள்.

விமானம் நொருங்கியதில் இறக்கை ஒன்று சிதறி அருகிலிருந்த பகுதிகளின் மீது விழுந்தது. அடுக்கு மாடிக் குடியிருப்பில் இருந்த கண்ணாடிகள் வெடித்துச் சிதறின. இதையடுத்து இந்தப் பகுதியில் வசித்த10 ஆயிரம் பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

தீயணைப்புப் படையினர் தொடர்ந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதுவரை 105 பேருடைய உடல் கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும், பலரது உடல்களை மீட்கும் பணி தொடந்து நடைபெற்று வருகிறது. காயம் அடைந்தவர்கள் ஹெலிக் கொப்டர் மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நகை வேலை செய்வதற்குரிய கம்பித் தகடு மெஷின் டைமெஷின் (200) (டை) உட்பட விற்பனைக்குண்டு. தொடர்பு: 021-222 9391, 0776032188. (43744)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரச உத்தியோகத்தர், 1975 M.B.B.S. (Doctor) , 1975 எலக்றோனிக் எஞ்சினியர், 1974 ஆம் ஆண்டு மாஸ்ரர் ஆகியோரின் குறிப்புக்கள் கனடா, லண்டன் ஆண், பெண் உத்தியோகத்திலும் இருக்கிறது. தொடர்பு: கிருஷ்ணா திருமண சேவை, சுப்பையா, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(43741)

**Refresh System**

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 077-6279671, 077-3253104.*

(43247)(21.19.16)

## சக்கர நாற்காலி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

கியூடெக் நிறுவனத்தினரால் ஆனைக்கோட்டையை சேர்ந்த வலுக் குறைந்த பெண் ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கப் பட்டது.

சக்கர நாற்காலி வழங்கும் வைபவம் நேற்று புதன்கிழமை மதியம் ஒருமணியளவில் கியூடெக் நிறுவன அலுவலகத்தில் இடம்பெற்றது.

சக்கர நாற்காலியை கியூடெக் நிறுவன இயக்குநர் ம.ஜெயக்குமார் அடிகளார் வழங்கினார்.

இந்த நிகழ்வில் அலுவலக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

(த-190)




## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 1997.06.24

கண் நெகிழ 2002.12.08

ஐந்து வயதினிலே அணைத்து
முத்தமிடுகையிலே
அறிவிழந்து வீழ்ந்திடவே அந்தகன்
உனை அணைத்தான்
அலறி அணைக்க முயல்கிறோமே-எம்
அன்புச் செல்வமே வராயோ!

**ரவிந்திரன் கஜேந்தினி**

உன்னை தேடி
உன்பிரிவால் வாடும்:
**அப்பா,அம்மா,**
**தம்பிமார்.**

பாரதி வீதி,
கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு.

(43645)(51)

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



நீங்கள் இல்லாமல்
நீண்ட நாள்கள் ஆனதாய்
சொல்லி நிற்கும்
வருடங்கள் - இருந்தும்

இந்தக் கணமும்
உயிர்ப்புடன் இருக்கும்
உங்களைப் பற்றிய
நிகழ்வுகள்....... நினைவுகள்.......

**அமரர் வி.எஸ். குணசிங்கம்**

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)

தோற்றம் 1951-02-05 — மறைவு 1996-12-16

*திதி: 08.12.2005*

உங்கள் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*48,ஸ்ரான்லி றோட்,*
*யாழ்ப்பாணம்*

(43749)
(39.21.19.14)

## மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த நடவடிக்கை

தென்மராட்சி,டிசெ.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9 வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்த வலயக் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சால் நடத்தப்படும் மாகாண மட்ட பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை சிறந்த பெறுபேறுகள் பெறுவதற்குத் தயார்ப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சகல பாடசாலைகளிலும் தரம் 9 வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை ஊக்குவித்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர், முதன்மை ஆசிரியர்கள் ஆகியோருக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகன் அறிவித்துள்ளார். (த-117)

## அடுத்த வருடத்துக்கான ஓய்வூதியத் திகதி அறிவிப்பு

தென்மராட்சி,டிசெ.8

ஓய்வூதியர்களுக்கான அடுத்த வருடத்திற்குரிய (2006) ஓய்வூதியத் திகதிகள் ஓய்வூதியப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.அந்த விவரம் வருமாறு:

ஜனவரி-10, பெப்ரவரி-9, மார்ச்-9, ஏப்ரல்-06, மே-10, ஜூன்-08, ஜூலை-11, ஓகஸ்ட் -10, செப்ரெம்பர்-12, ஒக்ரோபர்-04, நவம்பர்-09,டிசெம்பர்-07. (த-117)

## பண்புமிகுந்த சேவையாளனுக்கு கிளிநொச்சி நிர்மாணதாரர்களின் இதய அஞ்சலி

**அமரர் லயன் கிருஷ்ணபிள்ளை துரைராஜா**

(கிளை முகாமையாளர், நிர்மாண உத்தரவாத நிதியம்)



கட்டட நிர்மாணிகளான எங்களுக்கு நிர்மாண உத்தரவாத நிதிய கிளை முகாமையாளராக அறிமுகமானார். நாம் அவருடன் பழகிய குறுகிய காலத்தில் அவருடைய முழுமையான சேவை மனப்பான்மையை நன்கு அறிந்து கொண்டோம். அன்னாருடைய இழப்புக் கேட்டு மனம் கலங்கி நிற்கிறோம்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் குழந்தைகளுக்கு எமது நிறு வனங்களின் அதிபர்கள் மற்றும் ஊழியர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வன்னியன் ஒப்பந்தகாரர், இரத்தினபுரம், கிளிநொச்சி**
**K.P.K நிர்மாணதாரர்,**
**இரத்தினபுரம், கிளிநொச்சி,**
**கதிரொளி ஒப்பந்தகாரர், கிளிநொச்சி.**

(43752)(21.19.14)

## அறிவித்தல்

நாவலர் மகாவித்தியாலயத்தில் இன்று (08.12.2005) நடைபெறவிருந்த நாவலர் நினைவுப் பேருரையும் பரிசளிப்பு நிகழ்வும், தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**- அதிபர்.**

(43749) (39.21.19.14)

## பரிசளிப்பு விழாவும் பவள மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்,டிசெ.8


உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவும் பவளமலர் வெளியீட்டு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் கவிமணி க.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதன், இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை அதிபர் திருமதி ஆ.இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(த-203)

## மரண அறிவித்தல்

**செல்லத்துரை அதிஷ்டரட்ணம்**



அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கு, மகேசன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை அதிஷ்டரட்ணம் (பபி) 06.12.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் திருமதி மாணிக்கம் செல்லத்துரையின் மகனும் காலஞ்சென்ற குழந்தைவேலு (அதிபர்) மற்றும் திருமதி மீ.குழந்தைவேலுவின் மருமகனும் கலாவதியின் அன்புக் கணவரும் அரியநாயகம் (யோகரட்ணம்- கனடா), சறோஜினி, மங்களேஸ்வரி (முன்னாள் ஆங்கில ஆசிரியை - மானிப்பாய், மெமோறியல், மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜீவரட்ணம் (சென்னை - பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குலரட்ணம், குலேந்திரன், வித்யாவதி (அமெரிக்கா), ரவீந்திரன் (இத்தாலி), கங்கா, யமுனா, சித்திரா (கனடா), றூபேந்திரன் (கொழும்பு), உஷா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**திருமதி A. கலாவதி** *(மனைவி)*
**சகோதரங்கள்.** (39)

*நவாலி வடக்கு,*
*மு/மகேசன் வீதி, மானிப்பாய்.*

(43755)

## தேவை - நேரில் வரவும்




பத்திரிகை நிறுவனத்தில் பணிபுரிவதற்கு கணனித் தட்டெழுத்தாளர்களும் பக்க வடிவமைப்பாளர்களும் **உடன் தேவை.**

**Page Maker, Photo Shop, Corel Draw** ஆகிய மென் பொருள்களைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்ற அனுபவசாலிகளுக்கு உடனடி பணி நியமனம் வழங்கப்படும். இந்த மென்பொருள்களில் அடிப்படை அறிவுள்ளவர்கள் பயிற்சியாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 12-12-2005 அன்று உரிய ஆவணங்களுடன் நேரில் வருகை தரவும்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**உதயன் மனிதவள சேவை**

*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/46670)

# BARATHY
## சித்தன்கேணி

எமது ஆசிரியர்களுக்கு நிகர் வேறு எவரும் இல்லை

**புதிய வகுப்புகள்**

தரம்-5 தொடக்கம் 11வரை
சகல பாடங்களும் ஆரம்பம்-10.12.2005
சனி 7 மணி.

எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்....

விஞ்ஞானம்-திரு.தேவா
-திரு.பாலச்சந்திரன்
கணிதம் - திரு.எஸ்.சிவரூபன்
- திரு.சிவா
தமிழ்- தமிழ் இலக்கியம்- -திரு.குகபரன் -திரு.தமிழ்மாறன்
சமூகக் கல்வி- திரு.சுதன்
- திரு.சிவபாலன்
ஆங்கிலம்-திரு.விஜயபாஸ்கர்
-திரு.இராஜயகுலசூரியர்
-திரு.நிரோஜன்
புவியியல்-திரு.குகதாசன்
சமயம்-திரு.தரன்
- திரு.கவிதரன்
வர்த்தகம்-திரு.லோகேஸ்வரன்
சுகாதாரம்-திரு.காந்தன்

குறிப்பு-1)

மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு கல்வி நிறுவனங்களில் கற்பிக்கமாட்டார்கள்.

2) சென்ற ஆண்டு போல் இவ்வாண்டும் அனுமதிகள் வரையறுக்கப்படவுள்ளதால் இட நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக 10.12.2005 சனி அன்று உங்கள் அனுமதியினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

3) தரம்- 9,10,11இவ்வகுப்புகளுக்கு 90 பேருக்கும்-

தரம்-5,6,7,8 இவ்வகுப்புகளுக்கு 40 பேருக்கும் அனுமதிகள் வழங்கப்படும்.

(43767)(17)


# யாழ்ப்பாண மாநகரசபை
## வரவு செலவுத் திட்டம் 2006

*2006 ஆம் ஆண்டு கிடைக்கக்கூடிய வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவு விவரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் 2005 டிசெம்பர் மாதம் 16ஆம் திகதியிலிருந்து ஏழு நாள்களுக்கு யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்குமென மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 212 (b) பிரிவின் படி இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.*

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
06.12.2005 (சி/46685) (33-17-46)

**சீ.வி.கந்தையா சிவஞானம்**
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர்

**சி.கௌசிகன்** அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் மாணிக்கம் சின்னராசா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயம்,
தாளையடி. (சி/46687) (33-17-46) - *பாடசாலைச் சமூகம்.*

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 19 |
| 01 | 11 |
| 1931 | 2004 |



அமரர்

## வைத்திலிங்கம் இராசையா J.P.

*(ஓய்வுபெற்ற வலி.வடக்கு உதவி அரச அதிபர்)*

**திதி: 08.12.2005**

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாக இருந்து தன்னையே உருக்கி ஒளியூட்டிய எங்களின் அன்புத் தெய்வத்தின் இனிய நினைவுகளை எங்களின் இதயங்களில் சுமக்கின்றோம்.

*'துவாரகை'*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி.*
*சுன்னாகம்.* (43762) (33-17-46)

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் சின்னராசா

அல்வாய், திரவியபவனத்தைச் சேர்ந்த மாணிக்கம் சின்னராசா நேற்று (07.12.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - நாகமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரரும் கமலாவின் பாசமிகு கணவரும்,கௌசிகன் (ஆசிரியர், யா/ஆழியவளை சி.சி.த.க.பா.), கபிலன்(பலாலி ஆசிரிய கலாசாலை), விமலன் (உத்தியோகத்தர் - ஈழநாடு) ஆகியோரின் தந்தையும் தெய்வநாயகி வீரசிங்கம், செல்லத்தம்பி (ஓய்வுபெற்ற ஊழியர், மின்சாரசபை), ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரவியமலரின் மைத்துனரும் ஜெயபாரதி கௌசிகன், (ஆசிரியை, யா/கரணவாய் மகா வித்தியாலயம்)தாரணி கபிலன் ஆகியோரின் மாமனாரும் நிரூஜனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றையதினம் (07.12.2005 புதன்கிழமை பி.ப. 5 மணியளவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'திரவிய பவனம்',* (சி/46639) (33-17-46) *தகவல்:-*
*அல்வாய்.* *சி.கௌசிகன் (ஆசிரியர் -மகன்)*

## கனகசேகரம் தெசராசசிங்கம்

*(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)*



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசேகரம் தெச ராசசிங்கம் நேற்று (7.12.2005) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் றெஜீனாவின் அன்புக்கணவரும் வசந்தி(சுவிஸ்), ஜெயச்சந்திரன்(சவூதி), ஜெயக்குமார்(ஆசிரியர், மன்னார் G.T.M.S)., சுகந்தி, நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும் இராமேஸ்வரன் (சுவிஸ்), சுபாஜினி,கிருஸ்ணானந்தன்(கனடா), நேரு(ஆசிரியர், கம்பளை சாகிரா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2005) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தி ஓடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுரு வீதி,*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.* (43765) (33-17-46)

*தகவல்:-*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.*

## எட்வேட் வின்சன்

*(உரிமையாளர், மேரி பல்பொருள் வாணிபம் சங்கானை)*

சந்தி ஒழுங்கை, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட் வின்சன் நேற்று (07.12.2005) புதன் கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற எட்வேட் மற்றும் மேரிராணியின் அன்புப்புதல்வரும் டாசன், யோன்சன், ரொபின்சன்(பிரான்ஸ்), எட்மன் (ஜேர்மனி), லதா (ஜேர்மனி), ஜசிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுபா, றாஜி, இந்திரன், தெய்வேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் டிவோன், டியோன், டிசான், டினோஜா, எட்வினா, டில்சன், டிமோட்டன் ஆகியோரின் சிறியதந்தையும் நிலோஜினி, அனிஸ்ரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்அவரது இல்லத்தில் இன்று (08.12.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சந்தி ஒழுங்கை* (சி/46690) (33-17-46) *தகவல்:-*
*சங்கானை.* *குடும்பத்தினர்.*

## தம்பிராசா லீலாவதி

கரணவாய் தெற்கைச் சேர்ந்த தம்பிராசா லீலாவதி நேற்று (07.12.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும் வேலும்மயிலும் இன்பவாணி (சுவிஸ்), விஜயகுமார் கலைவாணி (சுவிஸ்), திருச்செல்வம் உசாவாணி (லண்டன்),சுரேன் சைலாவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கரணவாய் தெற்கு,* *தகவல்:-*
*கரவெட்டி.* (சி/46688) (33-17-46) *கந்தையா தம்பிராசா.*




**மனோகரா யாழ்ப்பாணம்**
7ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி விஜய்,அசின்,பிரகாஷ்ராஜ் நடித்த
**சிவகாசி**
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)
9ஆம் திகதி முதல்
காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா வடிவேல் நடித்த
**ஆறு**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம் காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30



**நாகம்ஸ் சுன்னாகம்**
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா, வடிவேல் நடித்த
**ஆணை**
தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00

**ராஜா யாழ்ப்பாணம்**
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவில் 200 நாள்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.
சுப்பர் ஸ்ரார் ரஜனி, இளையதிலகம் பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல், வினீத், விஜயகுமார் நடித்த
**சந்திரமுகி** காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30 மட்டும்



**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**
பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க
தற்காலிக புதிய நேரமாற்றம் 10.30, 1.30,4.30, இரவு 7.30
இன்று முதல் இந்தியாவிலும், இலங் கையிலும் ஒரேதின வெளியீடு
ஷாம்,சினேகா அபர்னா நடித்த
**ABCD**

# ஐடியல் அக்கடமி

தலைமையகம்: சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | கிளை I: மில்றோட், இடைப்பிட்டி, காரைநகர். | கிளை II: 67/5, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்.

## தரம் 6 முதல் O/L வரை

| ஆரம்பம் | 14.12.2005 புதன் காலை 8 மணி | 14.12.2005 புதன் காலை 10 மணி | 10.12.2005 சனி காலை 8 மணி |
|---|---|---|---|
| கணிதம் | V.N.பத்மநாதன், B.குகதாசன், T.ராஜ்மோகன் | V.N.பத்மநாதன், S.அருள்செல்வம், T.ராஜ்மோகன் | V.N.பத்மநாதன், B.குகதாசன் |
| விஞ்ஞானம் | A.தபேசன், T.தீபன் | R.திருப்புகழ், V.I.S.செல்வன் | A.தபேசன், V.I.S.செல்வன் |
| தமிழ் | N.கணேசமூர்த்தி, S.கண்ணன் | P.தமிழ்மாறன், S.கண்ணன் | A.முருகதாசன், S.கண்ணன் |
| சமூகக்கல்வி | R.S.சந்திரன், S.திவாகரன் | T.அரங்கநாதன் | S.திவாகரன், T.அரங்கநாதன் |
| ஆங்கிலம் | V.விஜயபாஸ்கரன், V.S.சூரி | V.S.சூரி, B.சுபாஸ் | V.விஜயபாஸ்கர், V.S.சூரி, B.சுபாஸ் |
| சமயம் | T.ஸ்ரீ, A.குகதாசன் | A.குகதாசன், V.N.சோதிநாதன் | N.கணேசமூர்த்தி, S.கவிதரன் |
| வர்த்தகம் | S.நித்தி | S.நித்தி | S.நித்தி |
| விவசாயம் | K.சுகாஸ் | | K.சுகாஸ் |
| சுகாதாரம் | M.முகுந்தன் | A.K.தாசன் | V.I.S.செல்வன், A.K.தாசன் |
| தமிழ்இலக்கியம் | E.சந்தானம் | E.சந்தானம் | E.சந்தானம் |
| பூவியியல் | S.திவா (43764) (33-17-46) | S.திவா | S.திவா |

ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த நிறுவனங்கள் — V.N. பத்மநாதன் - நிர்வாகி

# திருமலையில் நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாவது:-

தாயகத்தலைநகர் திருமலையின் தமிழ் பேசும் மக்களே!

* வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசம் எங்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அத்துமீறிக் குவிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா அரச படைகளை உடனடியாக மீளப்பெற்று முகாமுக்குள் அனுப்பக்கோரியும் -

* திருகோணமலை மூதூர் பிரதேசத்திலும், கிழக்கு மாகாணத்திலும் சிறுபான்மையின தமிழ், இஸ்லாமிய சகோதரர்களுக்கிடையில் மோதலை உருவாக்கும் பேரினவாதத்தின் சதியைக் கண்டித்தும் -

* அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இல்லாதொழித்து தமிழ்பேசும் மக்களின் மீது ஏவிவிடப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும் -

9.12.2005 வெள்ளிக்கிழமை அன்று திருகோணமலை மாவட்டம் தழுவிய பூரண கதவடைப்புப்போராட்டம் நடைபெறும் - என்று அதில் உள்ளது. (எ-க)

# கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றமுடியாது.

ஒப்பந்த ஏற்பாடுகளை மாற்றுவதற்கு அந்த ஒப்பந்தத் தரப்புகள் இரண்டில் ஒன்றான விடுதலைப் புலிகள் அமைப்பின் இசைவும் இணக்கமும் பெறப்படுவது அவசியமாகும்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்ட காலத்திலேயே இந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பொறுப்பை ஏற்பதற்கு நோர்வே விரும்பியிருக்கவில்லை. அதனை ஸ்கண்டி நேவிய அல்லது நோர்ட்டிக் நாடுகளில் ஒன்றுக்கு ஒப்படைக்கவே நோர்வே விரும்பியது.

ஆனால், அப்போதைய சந்திரிகா அரசும், புலிகள் அமைப்பும் வற்புறுத்திக் கேட்டதால் கண்காணிப்புப் பொறுப்பையும் நோர்வே ஏற்றுக் கொண்டது.

கண்காணிப்புப் பொறுப்பு ஸ்கண்டிநேவிய அல்லது நோர்ட்டிக் நாடு ஒன்றிடம் ஒப்படைக்கப்படுவதை புலிகள் தரப்பு எதிர்க்குமா என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை. (எ-க)

# அனுசரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள்கள் நோர்வேக்கு உத்தியோகபூர்வ அழைப்பை விடுக்காமல் காலத்தை இழுத்தடித்து வந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ. இந்த நிலையில் நேற்று ஒருவாறு அந்த அழைப்பை முன்வைத்திருக்கின்றார் ஜனா திபதி.

நேற்றுப் பிற்பகலில் அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் பிரிட்டன் ஆகிய நான்கு இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைதி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான முன்னேற்பாடாக நடைபெற்று வரும் கலந்துரையாடல்கள் மற்றும் ஆயத்தங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கினார் என இலங்கை அரசு தகவல் திணைக்களம் செய்திக் குறிப்பு தெரிவித்தது. (எ-க)

# பலாலி வழியாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பேச்சுகளை நடத்துவார்.

நேற்று கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடன் இடம்பெற்ற பேச்சுகளின் விவரத்தை நோர்வேத் தூதுவர் நாளைய சந்திப்பின் போது புலிகளின் தலைவர்களுக்கு விவரிப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

நாளைய பேச்சுகளை முடித்துக் கொண்டு கிளிநொச்சியிலிருந்து நோர்வேத் தூதுவர் கொழும்புக்கு என்ன மார்க்கத்தில் வந்து சேருவார் எனத் தெரியவரவில்லை.

வழமையாக கிளிநொச்சி விஜயத்துக்கு இலங்கை விமானப் படையின் ஹெலிக்கொப்டர்களையே நோர்வே அனுசரணைத் தரப்பினரும் கண்காணிப்புக்குழுத் தலைவர்களும் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் அத்தகைய வசதி ஏதும் மேற்படி இருதரப்பினருக்கும் இதுவரை வழங்கப்படவில்லை.

கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் கடந்த வியாழனன்று தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்குச் சென்றார். அவர் கொழும்பிலிருந்து, இரத்மலானை - பலாலி மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் விமானத்தில் பயணித்து பலாலியிலிருந்து தரை மார்க்கமாகவே கிளிநொச்சி சென்றார். கிளிநொச்சியில் புலிகளின் தலைவர்களைச் சந்தித்த பின்னர் அங்கிருந்து தரை மார்க்கமாகவே அவர் கொழும்பு திரும்பினார்.

இப்போது நோர்வேத் தூதுவரும் அதே மார்க்கத்தில்தான் கிளிநொச்சி செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க-6-14)

# புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன்) சேர்த்து நோர்வேத் தூதரையும் சந்தித்தார்.

வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் மற்றும் அதனால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது நோர்வேத் தூதுவரிடம் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மஹிந்த, நிலைமையை சீர்செய்ய நோர்வே அனுசரணையாளர்கள் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

இவ்வாறான சம்பவங்களால் ஏற்படும் நெருக்கடி நிலைமை குறித்து புலிகளுக்குத் தெரிவிக்குமாறு குறிப்பிட்ட ஜனாதிபதி, இது விடயத்தில் இணைத் தலைமை நாடுகள் கடும் அழுத்தமொன்றை புலிகளுக்கு வழங்க வேண்டுமெனவும் வற்புறுத்தித் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், நோர்வேத் தூதுவருடன் தனியான சந்திப்பொன்றை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க-6-14)

# யுத்த நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் சம்பவங்களால் அங்கு ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலை குறித்து முஸ்லிம் அமைச்சர்கள் சிலரையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் ஜனாதிபதி நேற்று முன்தினமிரவு சந்தித்து நீண்டநேரம் பேசினார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி , டக்ளஸ் தேவானந்தா, ரிஷாட் பதியுதீன், அமீரலி, ஏ.எல்.எம். அதாவுல்லா, நஜீப் ஏ.மஜீத், பிரதியமைச்சர்களான சேகு இஸ்ஸதீன், ஹுசைன் பைலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை மற்றும் அங்குள்ள பாதுகாப்புத் துறையினரின் பொறுப்பற்ற செயல்பாடுகள் குறித்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியதுடன் அங்கு அமைதியை நிலைநாட்டத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டினர்.

இந்தச் சந்திப்பின்போது நோர்வே அனுசரணைப் பணிகள் தொடர்பில் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்திய ஜனாதிபதி மஹிந்த, வடக்கு - கிழக்கில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையைத் தணிப்பதற்கும், வன்முறைகளை நிறுத்துவதற்கும் உரிய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குப் பொறுப்பு என்ற வகையில் எந்த நடவடிக்கைகளையும் நோர்வே எடுக்கவில்லையெனவும் அங்கு சாடினார்.

அமைதி முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியையும், போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணியையும் நோர்வேத் தரப்பே மேற்கொள்வதால் இவற்றில் எதுவும் முறையாக இடம்பெறுவதில்லையென்று குறிப்பிட்ட ஜனாதிபதி, இவற்றில் ஒன்றை மட்டும் நோர்வேத் தரப்பிற்கு வழங்குவது பற்றித் தீர்மானிக்கவேண்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

அனுசரணைப் பணிகளைத் திறம்பட மேற்கொள்வது பற்றி நோர்வேயுடன் பேச்சு நடத்தவுள்ளார் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இல்லையெனில் நோர்வேயுடன் பிறிதொரு நாட்டையும் அனுசரணைப் பணிகளில் ஈடுபடுத்தப் போகிறார் என்றும் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். ஆனாலும், அது எந்த நாடு என்பது பற்றிய விவரங்களை அவர் இந்தச் சந்திப்பில் வெளியிடவில்லை.

இதேவேளை - அமைதி முயற்சிகளுக்கான அனுசரணைப் பணி மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்பு ஆகிய இரு விடயங்களையும் ஒரே தரப்பான நோர்வேயிடம் வழங்காதிருப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொண்டிருக்கும் யோசனையை வரவேற்பதாக ஜே.வி.பி நேற்று அறிவித்திருக்கிறது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ, கட்சியின் இந்த நிலைப்பாட்டை அறிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

அமைதி முயற்சிகளையும், கண்காணிப்புச் செயல்பாட்டையும் ஒரே தரப்பிற்கு வழங்காமல் அவற்றை இரு வேறாகப் பிரித்து வேறொரு தரப்பினையும் சேர்ப்பது தொடர்பில் ஜனாதிபதி கொண்டுள்ள யோசனை வரவேற்கத்தக்கது. இது முந்திய நடைமுறையை விட சிறந்ததாகும். இதன்மூலம் நாம் நோர்வே தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாட்டை மாற்றிவிடவில்லை. விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுகளை நடத்துவதற்கு ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளை நாம் ஆட்சேபிக்கமாட்டோம்.

- இவ்வாறு விமல் வீரவன்ஸ எம்.பி. மேலும் கூறினார். (எ-க)

# மாணவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தொடர்ந்தனர்.

வடமராட்சி மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், யாழ். குடாநாட்டில் பாடசாலைகளை ஆக்கிரமித்தும் அவற்றை அண்மித்தும் இருக்கும் படையினர் அங்கிருந்து உடனடியாக வெளியேறவேண்டும் என்று கோரியும் மாணவர் அமைப்புக்கள் மாவட்டம் முழுவதும் பாடசாலைகள் முடங்கும் விதத்தில் புறக்கணிப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தன. படையினர் வெளியேறுவதற்காக அவற்றால் வழங்கப்பட்டிருந்த ஒருநாள் காலக்கெடு நேற்றுமுன்தினம் முடிவடைந்தது. அதை அடுத்து அவர்கள் நேற்றுப் போராட்டத்தில் குதித்தனர்.

மாணவர் புறக்கணிப்புக் காரணமாக யாழ். மாவட்டத்தில் அனைத்துப் பாடசாலைகளும் வெறிச்சோடிப் போயிருந்தன. ஆசிரியர்கள் மட்டும் வருகை தந்திருந்தனர். வீதிகளில் கூடிய மாணவர்கள், ரயர்களைப் போட்டு எரித்தும் தடைகளை ஏற்படுத்தியும் இராணுவத்தினருக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். பாடசாலைகளின் முன்பாகவும் அருகேயும் அமைந்துள்ள படையினரின் நிலைகளருகே சென்று கோஷங்களை எழுப்பினர். ரயர்களையும் போட்டுக் கொளுத்தினர்.

மாணவர்களின் இத்தகைய நடவடிக்கையால் மிரண்ட படையினர், பாதுகாப்புக் கருதி வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைக் கலைத்தனர்.

நேற்றுக் காலை யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக உள்ள யாழ். பிறவுண் வீதிச் சந்தியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் முன்பாகக் கூடிய மாணவர்கள் படையினருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியபடி வீதியில் ரயர்களைப் போட்டு எரித்தனர். உடனடியாக வான்நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்திய படையினர் மாணவர்களை அங்கிருந்து விரட்டியடித்தனர்.

அத்துடன் குண்டாந்தடிகளுடன் வீதிக்கு வந்த படையினர் அப்பகுதியூடாகச் சென்று வந்தவர்களைச் சிறிது நேரத்துக்குக் கண்டபடி தாக்கினர். அத்துடன் சுமார் நான்கு மணி நேரத்துக்கு பிறவுண் வீதி மற்றும் அரசடி வீதியூடான போக்குவரத்தையும் தடை செய்தனர்.

இப்படையினருக்கு ஆதரவாக அருகே கடமையில் இருந்த படையினரும் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண் டனர். கந்தர்மடம் சந்தி, கந்தர்மடம் ஆலடிச் சந்தி ஆகிய பகுதிகளிலிருந்த படையினரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டனர்.

இதேசமயம், யாழ். நகருக்கு அண்மையில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவர்களும் நேற்றுக் காலை பாடசாலை அருகே உள்ள கே.கே.எஸ். வீதியில் தடைகளைப் போட்டு போக்குவரத்துக்களைத் தடுத்து நிறுத்தினர். மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த படையினர், மாணவர்களைக் கலைப்பதற்காக வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். எனினும் மாணவர்கள் அந்த இடத்தை விட்டு அசையாததால், படையினர் விலகிச் சென்றனர்.

சிறிது நேரத்தின் பின்னர் பவள் கவச வாகனம் மற்றும் டிராக்டர் என்பவற்றில் அதிக எண்ணிக்கையிலான படையினர் அப்பகுதிக்கு வந்தனர். வீதி ரோந்தில் ஈடுபடுவதற்காகத் தம்மை மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்குமாறு கோரினர். ஆனால், மாணவர்கள் அதை ஏற்க மறுத்தனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

சிறிது நேரம் முரண்டுபிடித்த படையினர் பின்னர் திரும்பிச் சென்றனர். மாணவர்கள் தொடர்ந்தும் மறியலில் ஈடுபட்டனர். இதே போன்றே குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பிரதான பாதைகளருகே அமைந்திருந்த பாடசாலைகளின் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அசம்பாவிதங்களால் யாழ். மாவட்டம் முழுவதும் நேற்றுப் பெருமளவில் பதற்றம் நிலவியது. வடமராட்சியில் மாணவர் போராட்டம் உக்கிரமடைந்திருந்ததால், யாழ். நகரில் இருந்து அப்பகுதிக்கான போக்குவரத்து நேற்று இரண்டாவது நாளாகவும் தடைப் பட்டிருந்தது.

(எ-க-7-15-70-17-12-86)


ஸ்ரார் கல்வி நிலையம்

2006ஆம் கல்வியாண்டுக்கான
தரம் 5 முதல் 11 வரையான
புதிய வகுப்புகள் ஆரம்பம்

மல்லாகத்தில் 10.12.2005 மாலை 3.30
சுன்னாகத்தில் 11.12.2005 காலை 9.00

(43751)

கல்வியாண்டு 2006

தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் - 10.12.2005
சனிக்கிழமை காலை 9 மணி

சதா பொன்ஸ்
கல்வி நிலையம், அல்வாய்.

T.P: 021-2263206 (சி-40639)

நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்

கல்வியாண்டு-2006

தரம்-4 முதல் O/L வரை
ஆரம்பம்- 11.12.2005
ஞாயிறு 7 மணி.
அனுமதிகள் வழங்கப்படுகின்றது.
(43726)

BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
கல்வியாண்டு 2006
தரம் 3 முதல் O/L வரை
சகல வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம் - 10.12.2005 sat. 8 a.m.
(43551)

கல்வியாண்டு 2006

தரம் 6 முதல் O/L வரைக்கான
Evening Class ஆரம்பம் - 10.12.2005 சனி 2.00
(தூரப் பிரதேச மாணவர்களின் நலன்கருதி O/L
சனி,ஞாயிறு, வகுப்பு 8.30 -2.00 ஆரம்பமாகும்)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(43753)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 09 * 02 * 1940



இறப்பு 15 * 12 * 1999

## திருவாட்டி தேவராணி சுந்தரலிங்கம்

திதி: கார்த்திகை பூர்வபஷ்ஷ அட்டமி

இல்லம் விளங்க இனித்த முகத்தொடு
வெல்லம் நிகர்த்த சேய் இருவரை -நின்
நினைவுக்காய் நீள் நிலத்தேவிட்டு
நிமலனடி ஏகி ஆறு ஆண்டுகள் கழிந்தன
காயாத கண்ணீரும், தேறாத உள்ளமும் கொண்டு துயருறும்...

இரா.சுந்தரலிங்கம்
(முன்னாள் வடமாநில கல்விப் பணிப்பாளர்)
பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

செல்வானந்தவாசா,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(சி-46691)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.